
"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாசி 2009



ஸ்ரீ சிவாகமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேஸ்வரர்,
சைவ முன்னேற்றச் சங்கம்

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

15 வருடங்களாக மக்கள் சேவையில்

இலன்டன் வாழ் தமிழர்க்ளின் இதயங்களில் நீங்காத இடத்தில்

# BEST FOODS

SUPER MARKET






259 - 261 London Road, West Croydon, Surrey CR0 2RL
Tel : 020 8684 6269 | Fax : 020 8686 4577

364 - 366 Bath Road
Hounslow, Middlesex
TW4 7HT
020 8577 6002

249 Northolt Road
South Harrow, Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933
Fax : 020 8684 4677

11A - 13 Ealing Road,
Wembley
HA0 4AA
Tel : 020 8000 0100

414-416, High Street North
Manor Park
London E12 6RH
0208 552 9578

மணி 17

# கலசம்
KALASAM

ஒலி 63

www.smsuk.info
E-mail: kalasam @ gmail.com

# கற்றதை மறந்தோம்

ஒரு கதைதான் நினைவுக்கு வருகிறது. ஓர் ஊரிலே பலகாலம் மழை இல்லை. அதனால் அந்த ஊர் பஞ்சத்தின் விளிம்பில் இருந்தது. அவ்வூர் விவசாயிகள் மிகுந்த கவலையுடன் காணப்பட்டார்கள். அந்த ஊருக்கு ஒரு மகான் வந்தார். அங்குள்ள விவரத்தை அறிந்தார். அந்த ஊர் மக்களுக்குத் தம்மாலான உதவியைச் செய்ய விரும்பினார். ஊர் மக்களை அழைத்தார். "மக்களே! நாம் கடவுளை நினைத்து ஒரு யாகம் செய்தால் மழை வரும். உங்கள் கவலை எல்லாம் தீரும்" என்றார் அந்த மகான். ஊர்மக்களும் அதற்குச் சம்மதித்து யாகத்துக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும் மிகுந்த சிரத்தை எடுத்து, தேடிக் கொண்டுவந்தார்கள். யாகமும் ஆரம்பித்து, மிகச் சிறப்பாக நடை பெற்றது. ஆனால் மழை மட்டும் வரவில்லை. மக்கள் கோபம் கொண்டார்கள். மகானை அணுகி, 'இவ்வளவு செய்தும் மழை வரவில்லை. எங்கள் பொருளையும் நேரத்தையும் வீணாக்கிவிட்டீர்களே!' என்று திட்டினார்கள். மகான் மிக அமை தியாக அனைவரயும் கூட்டி அவர்களின் கேள்விக்குப் பதில் சொன்னார். "மக்களே! யாகம் செய்தால் மழை வரும் என்று நான் சொன்னது உண்மை. கொஞ்சம் சிந்தியுங்கள். யாகத்துக்கு வரும்பொழுது மழை வரும் என்ற நம்பிக்கையுடன் எத்தனை பேர் குடை கொண்டுவந்தீர்கள்?" என்றார் அந்த மகான். மக்கள் தங்கள் தவறை அப்போதுதான் உணர்ந்தார்கள். யாருமே நம்பிக்கையுடன் வரவில்லை; மழையும் பெய்யவில்லை. **இந்தக் கதையை; அது சொல்லும் தத்துவத்தை நாம் மறந்துவிட்டோம்.**

துச்சாதனன் திரௌபதியின் துகிலை உரியத் தொடங்கினான். திரௌபதி தன் துணைவர்களைப் பார்த்தாள்; அவர்கள் உதவவில்லை. சபையிலுள்ள வீரர்களைப் பார்த்தாள்; அவர்களும் உதவ முன்வரவில்லை. படித்தவர்களைப் பார்த்தாள்; யாருமே எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தனர். துகிலைத் தன் கையாற் பிடித்துக்கொண்டு கண்ணனை அழைத்தாள்; ஒன்றும் நடக்கவில்லை. ஒரு கையாற் துகிலைப் பிடித்துக்கொண்டு கண்ணனை அழைத்தாள்; அப்பொழுதும் கண்ணன் உதவவில்லை. இரு கைகளையும் மேலே தூக்கி, கோவிந்தா! கண்ணா! என்றபோதுதான் கண்ணன் அருள் செய்து, துச்சாதனன் உரிய, உரிய, துகில் வளர்ந்தது என்று பாரதத்திலே படித்திருக்கிறோம். **அதை இன்று நம்மிற் பலர் மறந்துவிட்டோம்.**

யாகம் செய்தோம். பூசை செய்தோம், ஒன்றும் நடக்கவில்லை; கடவுளை வழிபட்டோம், ஒன்றும் கிடைக்கவில்லை. கடவுள் எங்கே? இதையெல்லாம் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறார்! என்றெல்லாம் பலவாறாக மக்கள் புலம்புவது நம் காதிலே தினமும் கேட்கிறது.

'அழுங்குகின்றேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே'
என மணிவாசகர் கூறிய வழிநின்று - இறைவனிடம் நம்மைப் பூரணமாக அர்ப்பணித்தால்; அடைக்கலமானால், நடப்பது நலமாய் அமையாதா? நம்பிக்கை இன்றி, குறுக்கு வழிகளில் பலன்பெற நாம் நினைத்தால் எதுவும் கிடைக்காது. புராண இதிகாசங்கள் கற்பதற்கு மட்டுமல்ல; அவை சொல்வதை **நம்பிக்கையுடன் நாம் கடைப்பிடிக்கவும் வேண்டும் என்பதை நாம் மறக்கலாகாது.**

க ஜெகதீசுவரன் - ஆசிரியர்

**நிர்வாகக் குழு:** திரு. க. ஜெகதீசுவரன் (ஆசிரியர்) திரு. ச. ஆனந்ததியாகர் திரு. சி. தம்பு
திரு. சி. அற்புதானந்தன் திரு. வ. இ. இராமநாதன் திரு. சு. வைத்தியநாதன்

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# இந்த இதழில்


| | |
|---|---|
| அபிடேக ஆராதனைகள் - கந்தபுராணச் சிந்தனைகள் | 03 |
| வித்துவான் சிவாநந்தையர் | 05 |
| நானோ இதற்கு நாயகமே | 09 |
| ஆளுடையபிள்ளை - பெரியபுராணத்தொடர் | 12 |
| எழுத்துப் பிழையற..... | 16 |
| மத யானையிடமிருந்து தப்பிய அற்புதம் | 18 |
| அருணகிரியாரின் அற்புதப் பாடல் | 22 |
| மனித வாழ்வில் ஜோதிடம்... | 26 |
| எது செய்தாலும் அழகு - **தண்டபாணி தேசிகர் சிறப்புக் கட்டுரை** | 30 |
| துவாரகா (பயணக்கட்டுரை) | 33 |
| திருக்குறள் | 36 |
| கண்ணனும் தாத்தாவும் | 38 |
| Idols | 41 |
| சிறுவர் சித்திரங்கள் | 44 |
| Thiruvalluvar - picture story | 45 |

# அபிடேக ஆராதனைகள்

## கந்தபுராணச் சிந்தனைகள்

### சிந்திப்பவர் டாக்டர் க சிவலோகநாதன்

கோயில்களிலே நாம் செய்கின்ற உபயங்களில் முக்கியமானவையாக அபிடேக ஆராதனைகள் கருதப்படுகின்றன. முருகப்பெருமான் சிவபெருமானுக்கு அபிடேக ஆராதனைகள் செய்து வழிபட்டதாகவும், அதனாலே மகிழ்ச்சியடைந்த சிவபெருமான் அவருக்குக் கொடுத்த சர்வசங்காரப் படையினாலே அசுரப்படை முழுவதையும் முருகப்பெருமான் அழித்ததாகவும் ஐந்தாம் சிந்தனை யிற் பார்த்தோம். எம்முடைய சமயம், நமது கலாசாரத்திலே நல்ல விடயங்களின்போது ஸ்நானம் செய்விப்பதும், நைவேத்தியம் அளிப்பதும் அத்தியாவசிய நிகழ்ச்சிகளாகக் கருதுகின்றது. இராமா யணத்திலே இராமனுக்கு முடிசூட்ட இருப்பதாகவுள்ள செய்தியைச் சொல்லச் சென்ற வசிட்டமுனிவர் இராமரை ஸ்நானம் செய்வித்துத் தருப்பைப் பாயில் இருத்தியதாகக் கம்பராமா யணம் சொல்கிறது.

நண்ணி நாக வள்ளலை நான்வகைப்
புண்ணி யப்புனல் ஆட்டிப் புலமையோர்
எண்ணும் நல்வினை முற்றுவித் தேத்தினான்
வெண்ணி றத்தத ருப்பை விரித்தரோ

- மந்தரை சூழ்ச்சிப்படலம்

இவ்வாறே தம்மை ஆட்கொண்டு அருளிய சிவபெருமானுக்கு மணிவாசகப்பெருமான் பருப்பு, பச்சரிசி, தேங்காய்த்துருவல், சர்க்கரை என்பவற்றைக் கலந்து பாலிற் சமைத்த அமுதினை நைவேத்தியமாகக் கொடுத்ததாக திருவாதவூரடிகள் புராணம் சொல்கிறது.

பருப்புட னாளி கேரப் பழச்செழுந் துருவல் சேர்த்துச்
சருக்கரை கலந்து பாலிற் சமைத்தநல் லமுது தன்னை
இருத்திய கனகக் கால்மேல் இலங்குபொற் கலத்தின் மீது
விருப்பொடு படைத்து நெய்யும் மிக்கமுக் கனியும் பெய்து

- திருவாதவூரடிகள் புராணம்

கந்தபுராணத்திலேயும் அபிடேக ஆராதனைகள் சிறப்பாகச் சொல்லப்படுகின்றன. அவற்றில் இரண்டு இடங்களைப் பார்ப்போம்.

முருகப்பெருமான் திருவவதாரம் செய்தபின்னர் கயிலை மலையிலே விளையாடித் திரிந்தார். அவர் விளையாட்டாக மலைகள் அனைத்தையும் நிலைகுலையச் செய்வார். ஏழு சமுத்திரங்களையும் ஒன்றாக்குவார். ஆறுகளைத் திசைதிருப்புவார். இதனைக் கண்ட தேவர்கள் அவரோடு போருக்குப் போய்த் தோற்று அவருடைய பேரருளால் அவரைச் சரணடைந்தனர். அவருக்குக் கந்தகிரியிலே ஆலயம் சமைத்தனர். சமைத்த ஆலயத்திலே அவரை எழுந்தருளச் செய்தனர். அங்கு அவரைச் சேவித்துக் கொண்டாடி, ஆகாய கங்கையால் நீராட்டினர். அபிடேகம் செய்தபின்னர் அத்தேவர்கள் முருகப்பெருமானுக்கு மென்மையானதும், நுண்மையாகச் செய்யப்பட்டதுமான நுண்துகிலை அணிவித்தனர். முதிர்ச்சிபெற்ற சந்தனக் குழம்பு போன்ற வாசனைப் பொருள்களை அவருடைய மேனியிலே பூசினார்கள். ஒளி வீசுகின்ற பொன் ஆபரணங்களை அணிவித்தார்கள். தேன் நிறைந்த மலர்த் தொகுதிகளால் அமைந்த மாலை களைச் சூட்டினார்கள்.

நொதுமல் பெற்றிடு நுண்டுகில் சூழ்ந்தனர்
முதிய சந்தம் முதலமட் டித்தனர்
கதிரும் நன்பொற் கலன்வகை சாத்தினர்
மதும லர்த்தொகை மாலிகை சூட்டினர்.

- திருவிளையாட்டுப்படலம்

இதேபோன்று மணியாற்றங்கரையிலே சிவபெருமானை மகிழ்விப்பதற்காக முருகப்பெருமான் அபிடேக ஆராதனைகளை நிகழ்த்தினார்.

தன்னை வணங்கிய இந்திரனைப் பார்த்து, முருகப்பெருமான் சிவனுடைய திருப்பாதங்களை அருச்சனை செய்வதற்குத் தேவையான பொருள்கள் தருமாறு பணிக்கிறார். அவரின் கட்டளையைச் சிரமேற்கொண்ட இந்திரன், ஏவலர்களை விட்டு மணமிகு மலர் மாலைகள், திரைச்சேலை, நறுமண நீர், நைவேத்தியம், தீபம், தூபம், வாசனைப் பொருள்கள் என்பனவற்றையும் உதிரிப் பொருள்களையும் கொணர்வித்தான். பொருள்கள் வந்ததும், முருகப்பெருமான் ஓர் ஆலயத்தை நிறுவி அதிலே சிவனின் திருவுருவத்தைப் பிரதிட்டை செய்தார். பஞ்சகௌவியத்தாலும் பஞ்சாமிர்தத்தாலும் முறையாக அபிடேகம் செய்தார். குற்றமற்ற தூய ஆடையையும் மலர் மாலையையும் சந்தனத்தையும் சாத்தினார். தேவாமிர்தத்தைவிடச் சுவை யானவையும், சமையற் கலையில் வல்லவர்களும் புகழத்தக்கவையும் பலவகையாக அமைந்த வையுமான பொரியல் கறிகளுடன் கூடிய அன்னத்தைப் பொற்கலத்திற் படைத்து மந்திரத்துடன் நைவேத்தியம் செய்தார்.

மருந்தி னாற்றவுஞ் சுவையன வாலுவ நூல்போய்த்
திருந்தி னார்களும் வியப்பன திறம்பல வாகிப்
பொருந்து கின்றன நிரல்அமை கருனையம் புழுக்கல்
சொரிந்து பொற்கலத் தருத்தினன் மந்திரத் தொடர்பால்

- குமாரபுரிப் படலம் 69

அதன்பின் முகவாசம் வெற்றிலை, பாக்கு ஆகியவற்றைக் கலந்து அர்ச்சனை செய்தார். பின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் முன்னின்று கைகூப்பி மும்முறை வணங்கித் துதித்தார்.

கந்தம் வெள்ளிலை பூகநற் காயிவை கலந்து
தந்து பின்முறை அருந்தினன் புகைசுடர் தலையா
வந்த பான்மைக ளியாவையும் வரிசையா லுதவி
முந்து கைதொழுஉப் போற்றினன் மும்முறை வணங்கி

- குமாரபுரிப் படலம் 70

இவ்வாறாக இறைவனுக்கு, அவருடைய உருவத் திருமேனிக்கு, நாம் அபிடேக ஆராதனைகள் செய்து வணங்கவேண்டும் என்றும், இறைவனுக்கு மிகவும் பிரியமான வழிபாட்டுமுறை அதுவே என்றும், அவ்வாறான வழிபாட்டினாலேயே முருகப்பெருமான் சர்வசங்கார படையைப் பெற்றார் என்றும் கந்தபுராணம் சொல்லாநிற்கின்றது. அது மாத்திரமன்றி அவை செய்யப்படவேண்டிய முறைகளையும் விளக்கிக் கூறுகின்றது. குடமுழுக்குக் காண்கின்ற இலண்டன் ஸ்ரீமுருகப்பெருமானை, யாமும் அவர் சிவனுக்குச் செய்ததுபோல் அபிடேக ஆராதனைகள் செய்தால் நம்முடைய வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிகளைத் தருவானல்லவா?

# வித்துவான் சிவானந்தையர்

க உமாமகேசுவரம்பிள்ளை

தெல்லிப்பழை தென்மேற்கில் அமைந்த தலங்களில் ஒன்று வரத்தலம். வரத்தல விநாயகர் ஆலயத்தின் மேலை வீதிக்கு அண்மையில் உள்ளது அந்தச் சிறிய வீடு. மாணவர் ஒருவருக்கு ஆசிரியர் பாடம் சொல்கிறார். பிறிதொரு மாணவரோ பதுங்கிப் பதுங்கி மெல்ல வருகிறார். அவர் பதுங்கியும் தயங்கியும் வருவதைக் கண்ட ஆசிரியர் அட்டகாசமாக அவரை வரவேற்கிறார்.

"என்ன திடீரென்று இந்தப் பக்கம்......?"
மாணவர் வாயைத் திறந்து திறந்து மூடுகிறார். ஆனால் ஒலியேதும் வெளியே வருவதாக இல்லை.
"சனி ஏன் வரேல்லை?" இது இரட்டுற மொழிதல்.
"முழுக்கு"
"அப்ப ஞாயிற்றுக்கிழமை......?"
"அப்பு மறிச்சுப்போட்டா"
"சரி திங்கட்கிழமை.....?"
"மாவிட்டபுரம் கந்தசாமி தேர்"
"ஓஹோ!, செவ்வாய்கிழமை....?"
"அண்டைக்கு ஆடி அமாவாசையெல்லே"
"போகட்டும், புதன்கிழமை...?"
"காலில் சுழுக்கு"
"வியாழக்கிழமை......?"
"வந்தன், நீங்கள் இல்லை, திரும்பிப் போட்டன்"
"மெத்த நல்லது வெள்ளிக்கிழமை....?"
"எங்கட (விழிதீட்டி ஞானவைரவ சுவாமி) கோயில்லை பிரசங்கம் கேக்கப் போட்டன்"
"பிரசங்கம் பணிணினதார்?"
"சங்கரசுப்பையர்.[1] பிடில்,புத்துவாட்டி சோமு மத்தளம், புத்துவாட்டி இரத்தினம் சோக்கான பிரசங்கம்."
"ஓமோம், இராவிலேதானா பிரசங்கம்....?" (மாணவர் முகத்தில் அசடு வழிகிறது.)
"ஏட்டையும் எழுத்தாணியையும் எடும். வந்ததுக்கு ஏதாவது படிக்க வேண்டாமா?"

வெகு அநாயசமாக வெண்பா ஒன்று வந்து வழுகிறது. ஏட்டிலதை மாணவர் ஏந்திக் கொள்கிறார். இனி அப்பாடலை அவர் பாடித் தொலைக்கவேண்டும். நாணிச் சாம்பிய அந்த மாணவர் பாவம்! தழுதழுத்த குரலிற் பரிதாபகரமாகப் பாடுகிறார். சங்கராபரண ராகத்தில் வெண்பா ஒலிக்கிறது.

முழுக்கு மறிப்பு முருகன் திருத்தேர்
வழுக்கு திதியமா வாசி - சுழுக்கு
வரவுபிர சங்கமொரு வார முழுதுங்
கரவிதன்மே லுண்டோ கழறு[2]

1.கதாபிரசங்க மூலம் தாம்ட்டிய பொருள் கொண்டு திருவாலங்காட்டிலே தேரத்திருப்பணி புரிந்தவர். சந்நியாசம் பெற்றுச் சங்கரசுப்பைய சச்சிதானந்த யோகீசுவரராக விளங்கியவர். இவர் சமாதி கீரிமலையிலே உள்ளது.

2. முழுக்கு மறிப்பு முழுதும் விடுதலைநாள்
வழுக்கு திதியமா வாசை- இழுக்கு
வரவுபிர சங்கமொரு வார முழுதுங்
கரவிதைப்போ லுண்டோ கழறு

எனப் பாடபேதங்கள் பல மலிந்த பாடலாகவும் இது வழங்குகிறது. கலித்தளை (விடுதலைநாள் +வழுக்கு) விரவிய இப்பாடலை "வித்துவான் சொன்ன வெண்பா(?!)" என அவர் தலைமீது சுமத்துதல் தகாது.

அன்று பாட்டுடைத் தலைவராகும் பாக்கியம்படைத்த அந்த மாணவர் விழிதீட்டி தளையசிங்கம் அவர்கள். நகைச்சுவை உணர்வுடன் ஆசுகவி பாடி மாணவரை அயரவைத்துப் பிழையை உணர வைத்த அந்த ஆசிரியரே தெல்லிப்பழை வித்துவான் சிவாநந்தையர் அவர்கள்.

சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் தாயார் பிறந்த ஊர் ஏழாலை. 1878ஆம் ஆண்டிலே ஒரு காவிய பாடசாலையைப் பிள்ளை அங்கேயமைத்தார். இலக்கணக் கொட்டர் முருகேச பண்டிதர் அவர்களையும் அவர் மாணவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களையும் ஆசிரியர்களாக நியமித்தார். முருகேச பண்டிதர் அங்கே கற்பித்தது மிகச் சிறிது காலமே. புலவர் அவர்களிடம் ஏழாலையிலே கற்றுச் சிறந்தோரென இன்று அறியப்படுவோர் ஒன்பது பேர். இவர்களில் நால்வர் தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்கள். இவருள்ளும் அதி விவேகியாய், சிவஞானமுனிவரின் தருக்க சங்கிரக மொழிபெயர்ப்புப் பிழையென உலகுக்கு எடுத்துக் காட்டி விளக்கிய பெருமைக்கு உரியவர் வித்துவான் சிவானந்தையர் அவர்கள்.

ஐயர் அவர்களிடம் தமிழ் கற்கவென வந்தோரைவிட ஆங்கிலம் கற்கவென வந்தோரே மிக அதிகம். பிற்காலத்திலே திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை உப அதிபராக விளங்கிய சமயசாதகர் பொ.கைலாசபதி அவர்கள் பத்து வயசுச் சிறுவனாக (1912) இருந்தபோது ஐயர் வீடு சென்று ஆங்கிலம் கற்றதுண்டு. நன்னெறிச் செய்யுள்களைப் பாடம் பண்ணும்படியும் ஐயர் வற்புறுத்தினார். பாடம் பண்ணுவதென்றால் சிறுவராகிய கைலாசபதிக்கு ஒரே வெறுப்பு. அவர் அதிஷ்டம் சிரங்கு நோய் வடிவில் வந்தது. மூன்றே மூன்று மாசங்களோடு அந்தப் படிப்பு முடிந்துவிட்டது.

மாணவர் நல்வாழ்வு கண்டு மகிழும் பெருங்குணம் ஐயர்பால் நிறைந்திருந்தது. அவர்களிடம் தமிழை முறையாகக் கற்றுத்தேர்ந்து ஐயர் அவர்களின் ஒரே ஒரு மாணவர் என்ற பெருமையைப் பெற்றவர் விழிதீட்டி திரு.கா.ஆறுமுகம் (ஆறுமுகம்பிள்ளை) அவர்கள். தம்மூரவர் யாரும், தம்முடைய அறிவைப் பயன்படுத்தவோ தம்மிடம் கற்கவோ முன்வருவதில்லை என்ற மனக்குறை ஐயர் அவர்களுக்கு இருந்தது. 'தண்டா மரையி னுடன்பிறந்தும் தண்டே னுகரா மண்டுகம்...' என்ற விவேக சிந்தாமணிப் பாடலடியைச் சொல்லிச் சொல்லி அவர் வருந்துவாராம். அயலூரவரான ஆறுமுகம் கற்கவென வந்ததும் ஐயரின் மகிழ்ச்சி சொல்லுந் தரமன்று. மாணவர்மீது ஐயர் அவர்கள் மிகுந்த அன்பு பாராட்டினார்கள். தம்மூரவருக்கு அவரைச் சுட்டிக்காட்டியபடி, அதே விவேகசிந்தாமணிப் பாடலின் அடுத்த அடியான 'வண்டோ கானத் திடையிருந்து வந்தே கமல மதுவுண்ணும்' என்பதை உரத்த குரலிற் பாடுவாராம். மாணவரும் சிறந்த அறிஞராய், பௌராணிகர் திலகமாய்த் திகழ்ந்தார்கள். கந்தபுராணத்தை, ஏட்டிற் பலமுறை எழுதும் பேற்றினையும் பெற்றார்கள். (தெல்லிப்பழை குருநாதசுவாமி கோயிலிலும், காரைநகர் கதிர்காமசுவாமி கோயிலிலும் இவர்கள் எழுதிய கந்தபுராண ஏட்டுச் சுவடிகள் இன்றும் உள்ளன.) மனமிக மகிழ்ந்த ஐயர் அவர்கள் தம்முடைய மாணவருக்கு மணம் பேசி மணமுடித்துவைத்து அவர் நல்வாழ்வு கண்டு மகிழ்ந்தார்கள்.

ஒருமுறை மழையின்மையால் நெல்விளையவில்லை. சிவயோகசுவாமிகள், ஐயர் அவர்களின் மாணவரை அழைத்து, 'பூநகரிக்குப் போய்க் கந்தபுராணம் படி' என்றார்கள். பூநகரியிலே புராணபடனம் நிகழ்ந்தது. நல்ல மழை; அமோக விளைச்சல். சுவாமிகள் தாமே நேரில் ஒரு மூடை நெல்லுடன் வந்து ஐயர் அவர்களின் மாணவரை ஆசீர்வதித்தார்கள்.

ஐயர் அவர்கள் தக்கார் என்பது அவர்களின் எச்சத்தாலும் (ஞான புத்திரராகிய திரு கா.ஆறுமுகம் அவர்களாலும். ஐயர் அவர்கள் எழுதிய நூல்களாலும்) காணப்படும்.

சிதம்பரத்திலே பச்சையப்ப முதலியார் நிறுவிய ஆங்கில வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதராக ஐயர் அவர்கள் பணிபுரிந்த காலமே அவர் வாழ்வின் பொற்காலம் எனலாம். அக்காலத்திலேதான் நூல்கள் சிலவற்றை ஐயர் அவர்கள் எழுதினார்கள். தினந்தோறும் சிதம்பர சபாநாயகரைத் தரிசித்த பேற்றினாற் புலியூர்ப் புராணம், புலியூர் அந்தாதி என்பவை பிறந்தன. புலியூர்ப் புராணத்தை விரைந்து பாடி முடிக்கத் தூண்டுகோலாய் அமைந்தவர் தெல்லிப்பளை வழக்கறிஞர் திரு தம்பையா அவர்கள். வழக்கறிஞரின் துணைவியார் திருமதி பவளநாயகி அம்மையார் அந்த நூலை அச்சேற்றுவித்து வெளியிட்டார்கள்.

நெல் வயலிலே தாமரையும் ஆம்பலும் களைகளோடு களைகளாக நீக்கமற நிறைந்து செழித்திருக்கின்றன. களைபறிக்கும் பெண்கள் அவற்றைக் கைக்கோர் இனமாகப் பற்றித் திருகிப் பறித்துச் சிதைக்கிறார்கள்.

தாமரைக்கு மற்றொருபெயர் புண்டரீகம். புண்டரீகம் என்ற சொல் புலியையும் குறிக்கும். ஆம்பல் என்ற சொல் ஆம்பல் மலரை மட்டுமன்றி யானையையும் குறிக்கும். இச்சொற்கள் இப்படியெல்லாம் இரண்டிரண்டு பொருள் தருவதைச் சாதுரியமாகப் பயன்படுத்திச் சிலேடை அணிநயம் மிளிரவைக்கும் ஐயர் அவர்கள், சுவையானகேள்வி ஒன்றையும் கேட்கிறார்கள் புலியூர்ப் புராணத்திலேதான் அந்தக்கேள்வி வருகிறது.

> ஆம்பல் பற்பல வொருகையிற் பற்றின ரழிப்பார்
> தேம்பப் புண்டரீ கம்பல வொருகையிற் சிதைப்பார்
> சாம்பு மெல்லியர் மகளிரென் றுரைப்பது சழக்கோ
> நாம்பு கன்றது பொய்யுரை படுங்கொலோ நவிற்றீர்.
>
> (சழக்கோ - பொய்யோ)

பெண்கள் மென்மையான இயல்பினர் (மெல்லியர்) என்கிறீர்களே! இதோ! ஒரு கையாற் பல யானைகளை (ஆம்பல்களை) அழிக்கிறார்கள். மற்றொரு கையாற் பல புலிகளை (புண்டரீகங்களை) அழிக்கிறார்கள். நீங்கள் பெண்களை மிக மிக மென்மையானவர் என்பது பொய்யோ. நான்சொல்வது பொய்யோ சொல்லுங்கள்?

சிதம்பரத்திலே வாழ்ந்தபோதுதான் தருக்க சங்கிரகத்தின் உரைகளாகிய நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், அதன் உரையாகிய நீலகண்டீயம் என்பவற்றை ஐயர் அவர்கள் சம்ஸ்கிருத மொழியிலிருந்து தமிழாக்கம் செய்து அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள். சம்ஸ்கிருத மொழியிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கும் பாரிய வேலை முற்றுப்பெறத் துணை நின்றவர் ஆறுமுக நாவலர் மாணவ பரம்பரையில் வந்த தர்க்ககுடார தாலுதாரி திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள்.

சாதாரண சரமகவி கூட ஐயர் அவர்களின் வாயிலிருந்து வரும்போது கற்பனை நயமிக்க அசாதாரண கவிதையாகிவிடும். தெல்லிப்பளை (கொல்லங்கலட்டி)யில் வாழ்ந்த சின்னத்தம்பி உடையார் திடீரென இறந்துவிட்டார். அவர் மகன் சுப்பிரமணியம் அப்போது ஆபிரிக்காவில் இருந்தார். தந்தை இறந்தபோது அவர் மகன் அருகிலே இல்லையே என்ற கவலை குடும்ப நண்பரான ஐயர் அவர்களை வாட்டியது. சுப்பிரமணியம் என்றால் ஊரில் யாருக்கும் தெரியாது. மார்க்கண்டன் என்றால் மட்டுந்தான் தெரியும் (ஏன், சிவாநந்தையர் என்றாலும் ஊரில் யாருக்கும் தெரியாது. பரமையர் என்றால் மட்டுந்தான் தெரியும்.) இது நினைவுக்கு வந்ததும் ஐயர் அவர்களின் கற்பனை சிறகை விரித்தது. அருமையானதொரு கட்டளைக் கலித்துறை பிறந்தது. பாடல் முழுவதும் நினைவில் இல்லை. பல்லியின் அறுந்த வால் போல உயிர் துடிக்கும் அந்த ஈற்றடி மட்டும் இன்னமும் என் நினைவில் நிற்கிறது.

"மார்க்கண்டன் நிற்கில் இயமனுக் கேது வரத்துணிவே" என்பது தான் அந்த ஈற்றடி.


நளவருஷம் (1916) மார்கழி மாசத்திலே ஐயர் அவர்கள் மறைந்தபோது அவருக்கு வயசு நாற்பத்து மூன்று. தம்முடைய ஆசிரியப் பணியோடு நூலாக்கப் பணிகளை மிகக்குறுகிய வாணாள் எல்லைக்குள்ளே இவரால் இத்துணைச் சிறப்பாக எப்படி ஆற்றமுடிந்தது என்பது பெரிதும் வியப்பளிப்பதாகவே உள்ளது.

என் மனசைப் பெரிதும் உறுத்திக் கொண்டிருக்கின்ற விஷயம் ஒன்றைச் சொல்லாமல் இந்தக் கட்டுரையை பூர்த்திசெய்ய மனம் ஒப்பவில்லை. ஐயர் அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட தருக்க சங்கிரகம் அட்டை கட்டப்படாத அச்சுத் தாள்களாக அவருடைய மகள் வழிப் பேரன் வீட்டிலே குவிக்கப்பட்டிருந்தது. (வெளியீட்டு விழாக்கள் பற்றியோ அவற்றை எப்படி நடத்துவதென்ற நெளிவு சுழிவுகளையோ ஐயர் அவர்கள் அறிந்திருக்க நியாயமில்லை.) இடப் பெயர்வின் பின் அது இருந்த இடம் தெரியாமற் போயிருக்கும்.

**ஐயர் அவர்களுடைய விவேகம், கல்வி, அறிவு, ஆராய்ச்சி, உழைப்பு எல்லாமே இந்த மண்ணில் விழலுக்கிறைத்த நீர்தானா?**

கட்டுரைக்கான குறிப்புக்கள் உதவியோர்:
1.பௌராணிகர் திலகம் காசிப்பிள்ளை (காசிச் சட்டம்பியார்) ஆறுமுகம்
2.இங்கிலிசுச் சட்டம்பியார் சின்னத்தம்பி விசுவநாதர்
3.பண்டிதர் சின்னத்தம்பி கதிரிப்பிள்ளை
4.கொல்லங்கலட்டி ஆ காசிநாதன் ஆசிரியர்
5.இலக்கணவித்தகர் (பண்டிதர்) இ நமசிவாயதேசிகர்

## லண்டனிலே வள்ளுவர்



லண்டன் பல்கலைக் கழகத்தில் எஸ் ஓ ஏ எஸ் (School of Oriental and African Studies) என்றொரு பிரிவு இயங்கி வருகிறது. அந்தப் பிரிவுள்ள வளாகத்தில் திருவள்ளுவர் சிலை ஒன்று உள்ளது. சுமார் 5 அடி உயரத்தில் அமைந்துள்ள அழகான சிலை அது. ஆனால் அந்தச் சிலையிலே, கையிலிருந்த திருக்குறளை யாரோ எடுத்துச் சென்றுவிட்டார்கள். மறு கையிலே இருந்த எழுத்தாணியையும் உடைத்துவிட்டார்கள். நீல நிறத்தில் அமைந்த இந்தச் சிலைக்குமேல் பொன் நிற மையையும் யாரோ ஊற்றியிருக்கிறார்கள். இந்தக் குறைகளை நீக்கி, சிலையைச் சீராக்க சில அன்பர்கள் விரும்புகிறார்கள். தமிழர்கள் இதற்கு உதவ முன்வரலாமே.

# நானோ இதற்கு நாயகமே

**சைவப்பெரியார் கா.கதிர்காமத்தம்பி**

நமக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காய் அமைந்துள்ள அடியார் பெருமக்கள் எல்லோரும் மெய்ஞ்ஞானச் செல்வர்கள்; அவனருளாலே அவன் தாள் வணங்கியவர்கள். அவன் தந்த தமிழ் கொண்டு அவனையே பாடிப்பரவிய பொய்யடிமை இல்லாத புலவர் பெருமக்கள். தம்மை ஆண்டுகொண்ட பொருளிடம் தம்மையே பூரணமாக அர்ப்பணித்துவிட்ட மெய்யன்பர்கள். இத்தகைய உயர்ந்த அன்புநிலை கைவரப்பெற்ற அவர்களே நம் அன்புநிலை போதாது போதாது என்றும் இரங்குவார்கள். நமது பக்குவநிலை எம்மாத்திரம் என்று கவல்வார்கள். பக்குவநிலை போதாது என்று இரங்குவதே அதி உயர்ந்த பக்குவ நிலையாகும். அன்புநிலை போதாது என்று இரங்குவதே அதி உயர்ந்த அன்புநிலைதான்.

மணிவாசகப் பெருந்தகையார் 'அமுது அடியடைந்த அன்பர்' அன்பே திருவடிகளாக அமையப் பெற்றவர். அவர் அருளிய திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார். மணிவாசகம் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மையது. இத்தகு சிறப்பு வாய்ந்த அடிகளார் தமது அன்புநிலை போதாது என்று இரங்குவதை, தவிப்பதை திருவாசகம் முழுவதிலும் காணலாம். அரிதிற் பெற்ற திருவருளை நினைத்து வியந்தும், விழி நின்று அருளாரமுதம் வழங்கிய அண்ணலைப் பிரிய நேரிட்டதே என்று கவன்றும் அடிகள் அழுது அழுது அருளும் அருமை வாசகங்களே திருவாசகப்பாக்கள் என்று கூறிவிடலாம்.

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடைய பெரும்பொருள் தம்மை 'வா, வா' என்று வலிந்தாட்கொண்ட அருமையை எண்ணிப்பார்த்து, நான் யார்? இத்தகைய பெரும்பேற்றுக்கு நான் தகுதியுடையவன் தானா? என்று கருதினார். நான் இரும்பு தருமனத்தேன், வன்நெஞ்சக்கள்வன், மனவலியன், கல்லாமனத்துக் கடைப்பட்ட நாயேன், நாயிற் கடையாய்க் கிடந்த அடியேன், அவா வெள்ளக் கள்வனேன் என்றெல்லாம் தம்மைப் பற்றிக் குறிப்பிடும் போது அடிகள் அருளுவது அவருடைய அதியுயர்ந்த அன்புநிலையையே காட்டுகின்றது. கல்லைப் பிசைந்து கனியாக்குவது போன்று கல்லை மென்கனியாக்கும் விச்சை கொண்டு "பால்நினைந்தூட்டும் தாயினுஞ்சாலப் பரிந்து, மாசிலாமணியாகிய குறைவிலா நிறைவாகிய பெருமான் நம்மை ஈர்த்து வலிந்து வலிந்து ஆட்கொண்டு அருளினார்" என்பார் அடிகள். "விச்சை தான் இது ஒப்பதுண்டோ?" என்று அந்த அருமைப்பாட்டை ஆராமையோடு வினாவுகிறார்.

தன்னை வழிநின்று அருளாரமுதம் ஊட்டிய அண்ணலின் பிரிவைத்தாங்காது தவிக்கும்போது அதிதீவிர நிலைக்கே சென்றுவிடுகிறார்.

> ஏனை யாவரும் எய்திட லுற்றுமற் றின்னதென் றறியாத
> தேனை ஆன்நெயைக் கரும்பினின் தேறலைச் சிவனைஎன் சிவலோகக்
> கோனை மானன நோக்கி தன் கூறனைக் குறுகிலேன் நெடுங்காலம்
> ஊனை யானிருந் தோம்புகின் றேன்கெடு வேனுயிர் ஓயாதே.

என்று உயிரோடு இருத்தலையே வெறுத்துப் பேசுகிறார்.

உண்டு உடுத்து இங்கிருப்பதானேன், தீயில் வீழ்கிறேன், திண்வரை உருள்கிறேன் என்று தவிக்கின்றார். இத்தகு நிலையையே செத்திலாப்பத்து, வாழாப்பத்து போன்ற அருமையான பதிகங்களிலே அதிதீவிரமாக அடிகள் குறிக்கிறார்.

தம்முடைய மனத்தையே 'பிணம்' என விளிக்கிறார். செய்ய வேண்டியதைச் செய்யாது சடம்போற் கிடக்கின்றாயே என்று இடித்துப் பேசுகின்றார்.

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன் றறியேனே.

என்று தவிக்கின்றார். "நான் பாடவில்லையே, பணியவில்லையே, தேடிக் கதறித்திரியவில்லையே" என்று கசிகின்றார்.

பாடிற்றிலேன் பணியேன் மணிநீ ஒளித்தாய்க்குப் பச்சூன்
வீடிற்றிலேனை விடுதிகண்டாய் வியந்தாங்கலறித்
தேடிற்றிலேன் சிவன் எவ்விடத்தான் எவர்கண்டனரென்று
ஓடிற்றிலேன் கிடந்துள்ளுருகேன் நின்றுழைத்தனனே.

என்பது அவரது தவிப்பின் வெளிப்பாடு.

உயர்ந்த அடியார்களோடு தம்மை ஒப்பிட்டுப் பார்த்து இவர்கள் தாம் மெய்யன்பர்கள். "என் அன்பு எம்மாத்திரம்" என்று ஏங்குவார். "உன்னடியார்கள் திருக்கூட்டத்துள்ளே புகுவதற்குக்கூட எனக்குத் தகுதியில்லையே, என்னையும் மெய்யடியார் திருக்கூட்டத்திலே சேர்த்து மிகுகாதல் அடியவர் தம் அடியார்க்கும் அடியேனாக்கி அச்சந்தீர்த்து ஆண்டு அருளினானே" என்று இரங்குவார்.

புகவேதகேன் உனக்கன்பருள்யான் என் பொல்லாமணியே
தகவேஎனை உனக்காட்கொண்டதன்மை எப்புன்மையரை
மிகவேயுயர்த்தி விண்ணோரைப்பணித்தி அண்ணா அமுதே
நகவேதகும் எம்பிரான் என்னை நீ செய்த நாடகமே

நீ எனக்கு செய்த திருவருளின் பெருமையை அறியக் கூடிய தகுதி எனக்கில்லை. ஆகையால் நீ என்னை கைவிட்டது சரியே. உன்னில் குறை ஏதும் இல்லை. உன்னைப் பாடிப்பரவி ஏத்தும் பழைய அடியார் கூட்டத்தோடு சேர்ந்து திருநெறிபாடாமல் இங்கே நான் வினைநோய்க்கு ஆளாய் நல்ல விருந்தாய் இருக்கிறேன்.

என்னால் அறியாப்பதம் தந்தாய் யான் அதறியாதே கெட்டேன்
உன்னாலொன்றும் குறைவில்லை உடையாய் அடிமைக்கு ஆரென்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும் பழைய அடியாரொடுங் கூடாது
என்னாயகமே பிற்பட்டிங்கு இருந்தேன் நோய்க்கு விருந்தாயே
என்று உருகுவார்.

ஆண்டவனிடம் வேண்டும் போதுங்கூட வெறும் போகங்களையோ அறிவையோ வேண்டுகிறதில்லை. "புரந்தராதி இன்பமும் கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு" என்று வெறுத்தொதுக்குகின்ற துறவரசர், வேண்டுவதெல்லாம் உன்னடியில் இருப்பதும், உன்னைப் பாடுவதுமே என்கிறார்.

உற்றாரை யான்வேண்டேன், ஊர்வேண்டேன், பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்

குற்றாலத்தமர்ந்துறையும் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே

'ஆகம் விண்டுகம்பம் வந்து குஞ்சி சஞ்சவிக்கனே
ஆக என்அக கண்கள் தாரையாறதாக ஐயனே'

பாடவேண்டும் நான், போற்றி நினையே பாடி நைந்து நைந்துருகி நெக்கு நெக்காக வேண்டும் நான் என்று வேண்டுதல் செய்கிறார். செத்திலாப்பத்து, வாழப்பத்து அருளியவர் ஆசைப்பத்தும் அருளியுள்ளார்.

நான் எதை எவ்வாறு வேண்டுவ தென்பதையும் தீர்மானிக்க நான் யார்? நான் வேண்டத்தக்க பொருளையும் வேண்டும் பரிசையும் நீயே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அதுவும் உன்றன் விருப்பன்றே. எனக்குத் திருவடிப்பேறு கிட்டுமோ என்று நினைப்பதற்கும் எனக்கு என்ன அதிகாரம் உள்ளது என்று வினாவுகிறார்.
மேலும் மணிவாசகப் பெருமான் நீ என்னை எப்பொழுது ஆண்டு கொண்டாயோ அப்போதே என் உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டாய். இனி எனக்கென்ன குறை? நீ எதுவும் செய்யலாம். இதைப்பற்றிச் சிந்திப்பதுகூட அபசாரமல்லவா? என்று கசிகின்றார்.

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே!

என்று பரிபூரணகதி அடையும் நெறி அடிகளார் எமக்கு காட்டும் நெறி.

## திருவாசகம் - முற்றோதல் விழா

ஆண்டுதோறும் மணிவாசகர் குருபூசைத் தினத்தன்று லூயிஷாம் சிவன்கோயிலிலும் மார்கழி, திருவெம்பாவைக் காலத்தில் முதல் வரும் சனிக்கிழமை விம்பிள்டன் விநாயகர் கோயிலிலும் முறையே திரு ச வேதநாராயணன், திரு தியாகமூர்த்தி ஆகியோர் முயற்சியில் 'திருவாசகம் முற்றோதல் விழா' சிறப்பாக நடந்துவருகிறது.

இவ்வாண்டு, எட்டாவது முறையாக 26.06.09 வெள்ளிக்கிழமையன்று லூயிஷாம் சிவன் கோயிலில் மணிவாசகர் குருபூசைத் தினத்தை முன்னிட்டு, திருவாசகம் முற்றோதல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. சிவன்கோயில் ஓதுவார்மூர்த்தி திரு சாமி தண்டபாணி அவர்கள் உதவியுடன், காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணிக்கு முற்றோதல் நிறைவுற்றது. பல அன்பர்கள் அந்நிகழ்விலே பங்குகொண்டு சிறப்பித்ததோடு திருவாசகத்தைப் பாடியும் கேட்டும் தம்முடைய ஆன்மதாகத்தைப் பூர்த்திசெய்தார்கள்.

# ஆளுடைய பிள்ளை

-மு.சிவராசா-

ஆளுடைய பிள்ளை, ஆளுடைய அரசு, ஆளுடைய நம்பி. இவ்வருட்பெயர்களாற் குறிக்கப் படுவோர் தேவார முதலிகளாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆவர். பரம்பொருளாகிய சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டதால் இவர்களுக்கு இவ்வருட் பெயர்கள் வழங்கப்பெறுகின்றன.

இறைவனை வழிபட்டு முத்தியடைவதற்கு சைவ சமயத்தில் நான்கு வழிகள் சொல்லப்படுகின்றன. சரியை(தாசமார்க்கம்) கிரியை(சற்புத்திரமார்க்கம்) யோகம் (சகமார்க்கம்) ஞானம் (சன்மார்க்கம்) என்பன அவை. இம்மார்க்கங்களைக் கடைப் பிடித்து ஒழுகுவோர் அடையும் முத்தியும் நான்கு வகையாம். அவையாவன முறையே சாலோகம் (சிவன் உலகை அடைதல்), சாமீபம் (சிவன் சமீபத்திருத்தல்), சாரூபம் (சிவன் திருவுரும் பெற்றிருத்தல்), சாயுச்சியம் (சிவனோடு இரண் டறக் கலத்தல்) என்பனவாம். ஞானசம்பந்தர் காலத்தில் தமிழ்நாட்டிலே சைவசமயம் தன் நிலை குன்ற சமண, பௌத்த சமயங்கள் மேலோங்கி இருந்தன. அந்நாளில், சிவனது திருவருட் துணைகொண்டு பல அற்புதங்கள் நிகழ்த்திச் சைவசமயமே மெய்ச் சமயம் என நிறுவியவர் திருஞானசம்பந்தர். இவர் சீர்காழி என்னும் பதி யில் சிவபாதவிருதயர், பகவதியார் ஆகி யோருக்கு மகனாகச் சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திரதன்று அவதரித்தார். தமது மூன்றாவது வயதில் ஒருநாள், தந்தையாருடன் திருக்கோயிலுக்குச் சென்றார். கோயில் குளத்தில் தந்தையார் நீராடும்போது குழந்தை குளக்கரையில் அமர்ந்திருந்தது. நீராடும்போது தந்தையார் நீரில் முங்கியிருக்கையில் தந்தையாரைக் காணாத குழந்தை "அம்மே! அப்பா!" என அழைத்து அழுதது. இறைவனால் ஆட்கொள்ளப்படும் தகுதி பெற்றிருந்தமையால் அந்நேரம் பிரமபுரீசுவரர் தேவியுடன் குழந்தைமுன் தோன்றினார். அவர் பணித்தபடி தேவி குழந்தையின் கண்ணீரைத் துடைத்து தமது திருமுலைப்பாலைப் பொற் கிண்ணத்தில் கறந்து ஞானம் கலந்த, அப்பாலை ஊட்டினார்.

அப்போதே ஞானம் பெற்ற குழந்தை ஞானசம்பந்தர் ஆனது. இறைவனும் தேவியும் மறைந்தருள, ஸ்நானத்தை முடித்துக்கொண்ட சிவபாதவிருதயர் குழந்தையின் வாயிலே பால் வடிவதைக் கண்டார். "யார் தந்த எச்சிற்பாலைப் பருகினாய்" என்று கோபித்துக் கேட்க, மகனார் கோயிற் கோபுரத்தைச் சுட்டிக் காட்டி, "தோடுடைய செவியன்" என்னும் பாடல் மூலம் பதில் கொடுத்தார். ஆச்சரியத்துடன் மகனையும் கொண்டு கோயிலுக்குப் போய் இறைவன் அருளைப்போற்றி இருவரும் ஆலயதரிசனம் செய்தனர். நிகழந்தவற்றை அறிந்த மக்கள் யாவரும் அதிசயம் கொண்டு சம்பந்தரைப் போற்றிப் புகழ்ந்தனர். இறை அருள் பெற்ற குழந்தை, தலங்கள் தோறும் சென்று சுவாமிதரிசனம் செய்ய விரும்பியது. சீர்காழியின் சமீபத்தில் உள்ள திருக்கோலக்கா என்னும் தலத்துக்கு குழந்தையைத் தந்தை தோளிற் சுமந்து சென்றார். சுவாமி சந்நிதியில் தன் சின்னஞ்சிறிய கைகளாற் தாளம் போட்டுக் கொண்டே "மடையில்வாளை பாய" என்ற பதிகத்தைக் குழந்தை பாடிற்று. பெருமான் சத்தபுரீசுவரர் அதுசமயம் பொன்னாலான தாளம் ஒருசோடு குழந்தையின் கையிலே கிடைக்க அருள் புரிந்தார். பொற்றாளம் தட்டப்பட்டால் ஓசை எழாது. அத்தாளத்தில் ஓசை வரும்படி அருள்புரிந்த காரணத்தால் அக்கோயில் இறைவி ஓசை கொடுத்த நாயகியானார்.

தொடர்ந்து தலயாத்திரை மேற்கொண்ட ஞானக் குழந்தையைச் சிவனடியார்கள் சூழ்ந்து யாத்திரை செய்வாராயினர். இந்நிலையில் ஞானசம்பந்தரின் பெருமையை அறிந்த நீலகண்ட யாழ்ப்பாணர் என்பாரும் அவர் மனைவி மதங்கசூளாமணியாரும் சீர்காழி வந்து அவரைத் தரிசித்தனர். பாணர் குலத்தவரான இவர்கள் முறையே யாழ் வாசிப்பதிலும், பாடுவதிலும் வல்லவர்கள். தாங்கள் ஞானசம்பந்தருடன் தங்கி அவர் இசைக்கும் பாசுரங்களுக்கு அநுசரணையாக யாழ் வாசிக்க அநுமதிபெற்று அவ்வண்ணமே ஒழுகுவாராயினர். பாணர் என்பவர்கள் அக்காலத்தில் தாழ்ந்த குலத்தவராகக் கருதப்பட்டவர்கள்.

அடியவர்கள் புடைசூழ தளர்ந்த நடையாகவும் தந்தை தோள் மீதமர்ந்தும் தலயாத்திரை மேற்கொண்ட சம்பந்தப் பெருமான் பயன்படுத்தும் வண்ணம் திருநெல்வாயில் அரத்துறை என்னும் பதியில் சிவிகை ஒன்று இறைவனால் அவருக்கு அருளப்பட்டது. அவ்வப்போது சிவிகையில் ஊர்ந்து தலயாத்திரையின் போது அவர் அருளிச்செய்த திருப்பதிகங்கள் 16.000 என்பர். ஆயின் இப்போது நமக்குக் கிடைத்துள்ளவை 383 மட்டுமே. பாடற்தொகை 4147 ஆகும். இவை 219 தலங்களிலும் 7 பதிகங்கள் பொதுவான வையாகவும் அருளப்பட்டவை. இவற்றுள் சில பதிகங்களால் அற்புதங்கள் நிகழ்ந்தன. இவை தன்னலம் பாராது பொதுநல நோக்கில் ஆக்கப்பட்டன. இவர் ஞானப்பால் உண்டதால் ஓதாமலே வேதம் உணர்ந்திருந்தமை "நற்றமிழ் ஞானசம்பந்தன் நான்மறை கற்றவன்" என்ற அவர் கூற்றினாலே உணரலாம். அன்றியும் தாம் சொல்வன இறைவன் சொல்வனவே என்பதை "எனதுரை தனதுரையாக" என்ற திரு இலம்பயங் கோட்டூர்ப் பதிகம் மூலம் அறிவிக்கிறார்.

சீர்காழித் தேவர், புகலிவேந்தர், சண்பையர் கோன், காழியர் மன்னன், சைவசிகாமணி போன்ற பல பெயர்களாலும் அறியப்படும் திருஞானசம்பந்தர் காலத்தில் வாழ்ந்த நாவுக்கரசர். சிறுத்தொண்டர், முருகர், நீலநக்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நின்றசீர் நெடுமாறனார், குலச்சிறையார் மங்கையர்க்கர சியார் ஆகியோர் அவருடன் தொடர்பு கொண்டிருந்தமை மட்டுமன்றி பெரியபுரா ணத்திலே பேசப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் அடங்கும் பெருமையையும் பெற்றவர்கள். அந்தணர் குலத்தில் அவதரித்த ஞானசம்பந்தருக்குக் குல ஆசாரப்படி உபநயனம் செய்யவேண்டிய வயது வந்தது. சிவஞானம் கைவரப்பெற்றவராயினும் முறைப்படி குரு உப தேசம் பெறல் வேண்டுமென உறவினர் வற்புறுத்தினர். அவ்வாறே பூணூற் சடங்கு நடை பெற்றது. மந்திர உபதேசம் செய்யப்பெற்ற குழந்தை சடங்கு நடத்த வந்திருந்த ஆசாரி யார்களுக்குப் பஞ்சாட்சர மந்திர மகிமையை விளக்கி 'துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்திலும்' எனத்தொடங்கும் பஞ்சாட்சரப் பதிகம் பாடியரு ளினார்.

இவர் வரலாறு கேள்வியுற்ற நாவுக்கரசு பெருமான் சீர்காழி வந்து இவருடன் அளவ ளாவித் தங்கியிருந்தார். பின்னர் இவரும் சேர்ந்து பல சிவத்தலங்களைத் தரிசிக்கச் சென்று ஆங்காங்கு தேவாரத் திருப்பதிகங்கள் பாடி யருளினார்கள். இருவரும் தனித்தனியாக தலயாத்திரை செய்ததும் உண்டு. ஒருபோது ஞானசம்பந்தர் திருப்பாச்சில் ஆசிரமம் என்னும் தலத்துக்குச் சென்றிருந்தார். அங்கு கோயில் தரிசனத்துக்காக உள்ளே சென்றபோது கொல்லி மழவன் என்பவருடைய மகள் முயலகன் என்னும் நோய்வாய்ப்பட்டுச் சந்நிதானத்திலே கிடக்கக் கண்டார். விவரம் அறிந்து அவள் நோய் தீரும்படி இறைவனை வேண்டித் 'துணிவளர் திங்கள்' என்ற திருப்பதிகம் பாட, அவள் நோய் நீங்கி எழுந்தாள். இன்னொருபோது பட்டீச்சரம் போனார். அங்கு வெயில் அகோரமாய் எறித்தது. உடன் வந்த அடியவர்கள் அதனைத் தாங்கமுடி யாது அல்லற்பட்டனர். இவர்படும் துன்பத்தை நீக்கத் திருவுள்ளம் கொண்ட இறைவன் அந்த இடத்தில் நிழல் கொடுக்க ஒரு பந்தர் அமையும்படி அருள் செய்தார். அந்தப் பந்தர் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட முத்துப்பந்தர். திருவோத்தூர் என்னும் தலத்துக்குச் சென்ற போது அவ்வூர்ப் பனைகள் எல்லாம் காய் தராத ஆண்பனைகளாக இருந்தமையை மாற்றி குலை ஈனும் பெண் பனைகளாகும்படி, 'பூத்தேர்ந் தாயன' என்ற திருப்பதிகம் பாடி அருளினார்.

மற்றொரு சமயம் சைவசிகாமணி திரு ஆவடுதுறை வந்தார். உடன்வந்த அடியவர்களுள் சிவபாதவிருதயரும் இருந்தார். அவர் தம் கடமை களில் ஒன்றான யாகம் செய்வதற்குப் பொருள் தேவைப்பட்டது. மகனிடம் தம் தேவையை எடுத்துரைத்தார். அவர் தம்மை ஆட்கொண்ட தந்தையாகிய செம்பொற்தியாகரை வேண்டி "இடரினும் தளரினும்" எனும் பதிகம் பாடினார். ஆயிரம் பொற்காசு கொண்ட பொன்முடிச்சு ஒன்று கிடைத்தது. அது எடுக்கக் குறையாத பொன்னைக் கொண்ட உலவாக்கிளி. அதனைத் தந்தையிடம் கையளித்து அவரும் சீர்காழியில் உள்ள அந்தணப் பெருமக்களும் யாகம் செய்வதற்குப் போதுமான பொன் அதில் உள்ளதெனக் கூறினார். பெற்றுக் கொண்ட தந்தை சீர்காழி திரும்பினார்.

ஒரு நாள், தருமபுரம் என்ற தலத்தில்

தங்கியிருந்தபோது சுவாமி சந்நிதானத்தில் பாணனார் ஒரு வேண்டுகோள் விடுத்தார். காழிப்பிள்ளை அருளும் பாடல்களுக்கு இசைவாக தாம் யாழ் வாசிப்பதாகவும் யாழில் அடங்காத பண்ணில் ஒரு பதிகம் பாடியருள வேண்டும் என்பது அந்த வேண்டுகோள். அதற்கிசைந்த சம்பந்தர் யாழ்முரிப் பண்ணில் அமைய, "மாதர்மடப் பிடியும்" எனத் தொடங்கும் பதிகத்தை அருளினார். அதைப் பாணரால் யாழில் அமைத்து வாசிக்க முடியவில்லை. மனம் நொந்த பாணனார் தமது யாழை முரிக்க முயன்றார். பிள்ளையார் தடுத்து யாழை வாங்கிக்கொண்டு பாணரைத் தேற்றினார். பிறிதொருசமயம் திருச்சாத்த மங்கையில் நீலநக் கருடனும், செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டருடனும் தங்கி சுவாமி தரிசனம் செய்தார். திருமருகல் சென்றபோது ஆலயத்துக்குச் சமீபத்தில் இருந்த மடம் ஒன்றிலிருந்து ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது. அருகில் சென்று பார்த்தார். வணிக இளைஞன் ஒருவன் பாம்பு தீண்டி இறந்து கிடந்தான். அவனை மணம் செய்ய இருந்த கன்னி அவனருகே அழுது கொண்டிருந்தாள். கருணை உள்ளம் கொண்ட புகலிகாவலர் "சடையாய் எனுமால்" என்னும் திருப்பதிகம் பாடியருள வணிகன் உயிர் பெற்றெழுந்தான். இவருக்கும் திருமணம் நடக்க அருள் புரிந்தார். கொள்ளம்பூதூர் ஆலய தரிசனம் செய்வதற்கு முள்ளிவாய் என்னும் ஆற்றைக் கடக்க வேண்டியிருந்தது. ஆற்றங் கரையில் ஓடங்கள் இருந்தன. ஆனால் ஓடக்காரர் எவரும் அந்நேரம் அங்கில்லை. சம்பந்தப்பெருமான் அடியவர்களையும் ஓடத்தில் ஏற்றி "கொட்டமே கமழும்" என்னும் பதிகம் பாட, ஓடம் மிதந்து மறுகரை சேர்ந்தது. ஆலய தரிசனம் முடித்து மீண்டும் முன்போலவே அனைவரும் இக்கரையை அடைந்தனர்.

நாவுக்கரசு பெருமானுடன் தலயாத்திரை மேற்கொண்டிருந்த காலத்தில் இருவரும் ஒரு சமயம் திருவீழிமிழலை வந்திருந்தனர். அவ்வூரில் மழைபொய்த்ததால் விளைவு குன்றி ஊர்மக்கள் பட்டினியில் வாடினார்கள். இவர்கள் இருவரதும் கனவிலே தோன்றிய இறைவன் மக்கள் பசி தீர்க்கும் பொருட்டு இருவருக்கும் படிக்காசு தருவதாகத் தெரிவித்தார். அவ்வாறே இருவரும் படிக்காசுபெற்று பஞ்சம் நீங்கும் வரை மக்கள் பசி தீர உணவளித்து வந்தனர். இருவரும் பின்னர் திருமறைக்காடு சென்றனர். அப்பதியின் வேதாரண்யேஸ்வரர் கோயில் பிரதான கோபுர வாயில் கதவு பலகாலமாகத் திறக்கப்படாமல் அடைக்கப்படிருந்தது. சுவாமி தரிசனம் செய்வதற்காக மக்கள் வேறொரு சிறிய வாசல் அமைத்து அதன் வழியே போய் வந்தனர். சம்பந்தரும் அப்பரும் அங்கு வந்தபோது சம்பந்தர் "நாம் பிரதான வாயில் வழியாகவே உட்சென்று சுவாமி தரிசனம் செய்வோம். கதவு திறக்கும்படி தாங்கள் பாடியருள வேண்டும்" என அப்பர் சுவாமிகளைக் கேட்டுக்கொண்டார். அவரும் "பண்ணின் நேர் மொழியாள்" எனத் தொடங்கும் பதிகம் பாட, கதவு தானே திறந்து கொண்டது. இருவரும் சந்நிதி சென்று தொழுது வாயில் வழியாகவே வெளியே வந்தனர். அப்போது அப்பர்பெருமானார் கதவு மூடிக் கொள்ளும்படி பதிகம் பாடும் வண்ணம் சம்பந்தரை வேண்டினார். அவரும் "சதுரம்மறை தான்" என்னும் பதிகம் பாட, கதவு தானே மூடிக்கொண்டது. அன்றிலிருந்து அடியவர்கள் யாவரும் அந்தப் பிரதான வாயில் வழியாகச் சென்று வரக்கூடியதாக அமைந்தது.

திருமறைக்காட்டில் இருவரும் தங்கியிருந்த காலத்தில் மதுரை மன்னன் பாண்டியனும், நாட்டு மக்களும் சமண சமயம் சார்ந்ததால் சைவசமயம் தாழ்நிலையுற்று இருந்தது. பாண்டிமாதேவியும், அமைச்சர் குலச்சிறையாரும் சைவம் புத்துயிர்பெற்றுத் தழைக்கவேண்டுமெனப் பேரவா கொண்டிருந்தனர். அதற்காக ஞானசம்பந்தரை மதுரைக்கு எழுந்தருளக் கோரி தூதுவரை அனுப்பியிருந்தனர். கோரிக்கைக்கு இசைந்த சம்பந்தர் புறப்படும்போது அப்பர்சுவாமிகள் அந்தச் சமயத்தில் நாளும் கோளும் நன்னிலையில் இல்லை என்று சம்பந்தரின் புறப்பாட்டைத் தடுத்தார். பதிலாக சம்பந்தர், "பரவுவது நம்பெருமான் கழல்கள் என்றால் பழுது அணையா" எனக்கூறி அவரைச் சமாதானப்படுத்தி மதுரை சென்றார். அப்போது அவர் அருளிய துதான் "வேயுறு தோளி பங்கன்" எனத் தொடங்கும் கோளறு பதிகம்.

மதுரையில் அவரை அரசியாரும், மந்திரியாரும் வரவேற்று ஒரு மடத்தில் தங்க வைத்தனர். சம்பந்தர் வரவால் தம் சமயத்திற்கு ஆபத்து வந்ததெனப் பயந்த சமணர்கள் மன்னன் சம்மதத்தோடு மடத்துக்கு தீ வைத்தனர். தீ

பரவும் முன்னரே சம்பந்தர், "செய்யனே திருஆலவாய் மேவிய ஐயனே" எனத்தொடங்கும் திருப்பதிகம் அருளிச்செய்து பாண்டியராசனுக்கு வெப்பு நோய் உண்டாக்கும்படி செய்தார்.

பல்வேறு வைத்தியங்களுக்கும் குணமாகாத நிலையில், மன்னவன் ஒப்புதலோடு சீர்காழிப் பிள்ளையார் வரவழைக்கப்பட்டார். வந்தவர் "மந்திரமாவது நீறு" என்ற திருநீற்றுப்பதிகம் பாடி நீறு சாத்த மன்னன் நோய் தீர்ந்தது. அதன்பின் சம்பந்தப்பெருமானுக்கும் சமண குருமாருக்கும் இடையிலே சமயவாதம் நடந்தது. தத்தம் சமய உண்மைகளை ஏட்டில் எழுதி நெருப்பிலும், வைகை ஆற்றிலும் இட்டபோது சம்பந்தர் விடுத்த ஏடு எரியாமலும், வைகை நீரோட்டத்துக்கு எதிராகவும் போக, சமணர் இட்ட ஏடு சாம்பராயும், ஆற்றுநீரோடும் அடித்துச்செல்லவும் பட்டதால் வாதில் சமணர் தோற்றவராயினர். பாண்டிய மன்னவன் சைவசமயம் தழுவினான். கூன்பாண்டியனாய் இருந்த பாண்டிய மன்னன் சம்பந்தர் வாழ்த்தினால் கூன் நிமிர்ந்து நின்றசீர் நெடுமாறன் ஆனான். பாண்டி நாட்டில் மீண்டும் சைவசமயம் புத்துயிர் பெற்றது. ஞானசம்பந்தர் அந்நாட்டுச் சிவத்தலங்கள் பலவற்றையும் தரிசித்து அடுத்தடுத்த நாடுகளையும் கடந்து தொண்டை நாடு வந்தார்.

தொண்டை நாட்டில் மயிலாப்பூர் என்னும் பதியில் சிவநேசச் செட்டியார் என்பவர் இருந்தார். அவர் மகள் பூம்பாவை. ஞானசம்பந்தர் பற்றிய விவரங்களை அறிந்த செட்டியார் தமது மகளை அவருக்கே மணஞ்செய்து கொடுக்க எண்ணி யிருந்தார். ஆனால், கன்னிப்பருவத்திலேயே அவள் பாம்பு தீண்டி இறந்து போனாள். உடலைத் தகனம் செய்து சாம்பரை ஒரு கலசத்திலே சேமித்து வைத்தார் செட்டியார். மயிலாப்பூர் வந்த சம்பந்தரைச் செட்டியார் வரவேற்று வணங்கினார். பூம்பாவை பற்றிய விவரம் அறிந்த சம்பந்தர் சாம்பர் பொதிந்த கலசத்தை கபாலீசுவரர் கோயிலுக்கு எடுத்துவரச்செய்து "மட்டிட்ட புன்னை" என்ற திருப்பதிகத்தை அருளினார். சாம்பர் பழையபடி தேகம் கொண்டு உயிர்பெற்று பூம்பாவையாக எழுந்தது. அவளை மணந்து கொள்ளும்படி வேண்டிய செட்டியாரின் கோரிக்கையை "தாம் உயிர்ப்பித்த பெண் தன்மகளே யாவார்" என்கூறிச் சம்பந்தர் நிராகரித்தார்.

தொடரந்து பல தலங்களையும் தரிசித்து வந்த சண்பையாளி சீர்காழி சேர்ந்தார். வயது பதினாறு ஆயிற்று. அவருக்குத் திருமணம் செய்விக்கப் பெற்றோரும் மற்றோரும் விரும்பினர். முதலில் மறுத்த சம்பந்தர் பின்னர் இறைவன் திருவுள்ளம் அதுவானால் நடக்கட்டும் எனச் சம்மதம் தெரிவித்தார். திருநல்லூர்ப் பெருமணத்து நம்பியாண்டார் நம்பி என்பாருடைய மகளை இவருக்குத் திருமணம் செய்வதென நிச்சயிக்கப்பட்டது.

நீலநக்கர் திருமணச்சடங்குகளை நடத்தினார். மணவறைக்கு முன்னால் யாகாக்கினி கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. மணமக்கள் நெற்பொரியை அக்கினியில் ஆகுதியாக்கினர். சம்பந்தர் மணமகளின் கையைப்பற்றிய வண்ணம் அக்கினியை வலம் வந்தனர். அந்நேரம் யாவரும் விரும்பும் வண்ணம் அக்கினியாய் உள்ளவரும் சிவனே என்ற தெளிந்த உள்ளத்தோடு இவளுடன் இல் வாழ்க்கையில் ஈடுபட நேருவதைத் தவிர்த்து இவளுடன் சிவன்தாள் சேரும் ஆர்வம் கொண்டார். திருநல்லூர்ப் பெருமண இறைவனை நினைந்து "கல்லூர்ப்பெருணம்" எனத்தொடங்கும் திருப் பதிகத்தை அருளிச்செய்ய, அவ்விடத்து ஓர் ஒளி தோன்றியது. அத்துடன் "நீயும் உன்திருமணம் காண வந்தவர் அனை வரும் இச் சோதியிற் புகுந்து என்பதம் அடையுங்கள்" என்றோர் அசரீரி வாக்கும் கேட்டது. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை ஓதி அசரீரி வாக்கின் பிரகாரம் அனைவரையும் சோதி யுட் புகவிட்டு ஈற்றில், கைப்பிடித்த கன்னியுடன் ஞானசம்பந்தரும் சோதியுட் புகுந்து சிவபெருமான் திருவடி அடைந்தனர். இவ்வளவிற் சோதி தணிந்தது. பெருமணக்கோயில் மீண்டும் தோன்றியது. திருஞானசம்பந்தர் இறைவன் திருவடி சேர்ந்த நாள், வைகாசி மாத மூல நட்சத்திர நன்னாளாம்.

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே

திருச்சிற்றம்பலம்

# எழுத்துப் பிழையற.......

கோயில்களிலே பூசை வழிபாடுகள் செய்யும்பொழுது வேதபாராயணம் - திருமுறைப் பாராயணம் என உபசாரங்கள் செய்வது முறை. அதிலே பஞ்சபுராணம் என்ற திருமுறை பாடும்பொழுது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பவை மட்டுமே பாடுவது மரபு. மூலமூர்த்தி எதுவாக இருந்தாலும், விநாயகரோ, முருகனோ, அம்பாளோ - பெரியபுராணமே பாடவேண்டும். பெரியபுராணம் பாடி முடித்தபின், விரும்பினால், அந்தந்தத் தெய்வத்தின்மேல் வேறு அருளாளர்கள் பாடியுள்ள அருட்பாடல்களைப் பாடலாம். உதாரணமாக, விநாயகருக்கு பதினொராம் திருமுறையில் திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை போன்ற பாடல்கள் உள. முருகனுக்கு அருணகிரியாரும் நக்கீரரும் அருளிய பாடல்கள் - கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருமுருகாற்றுப்படை, திருப்புகழ் எனப் பல உள. அம்பாளுக்கு அபிராமி அந்தாதி போன்ற பல துதிகள் உள்ளன. ஆனால், பஞ்சபுராணம் பாடும்போது பலரும் பெரியபுராணத்துக்குப் பதிலாக வேறு பாடல்களைப் பாடுகிறார்கள். இது தவறு. குறிப்பாக முருகன் கோயில்களிலே மூவிருமுகங்கள் போற்றி என்ற பாடல் பாடப்படுவதாக சென்ற இதழிலே குறிப்பிட்டிருந்தோம். பெரியபுராணம் முருகனுக்குப் பாடலாமா? என்பது சிலரின் கேள்வி; சந்தேகம். "ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும் பேதகமன்று" எனவரும் கந்தபுராண அடிகளால், முருகனும் சிவனும் ஒன்றே என்பது புலனாகும்.

இனி, பாடலுக்கு வருவோம். 'மூவிரு முகங்கள் போற்றி' என்ற பாடலைப் பாடும்பொழுது,

"மூவிரு முகங்கள் போற்றி, முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி
காஞ்சி மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி
அன்னான் சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி"

என்று பாடுகிறார்கள். பாடலின் அமைப்பே சிதைந்துவிட்டது.

கந்தபுராணத்திலே காப்புச் செய்யுள்களாக ஐந்து செய்யுள்கள் உள்ளன. திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான், உச்சியின் மகுட மின்ன, மூவிரு முகங்கள் போற்றி, இந்திராகிப் பார்மேல், வான்முகில் வழாஅது பெய்க என்பவையே அவை. கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணத்தைப் பாடியபோது திருமுருகனே செய்யுட்களைத் திருத்தியதாக வரலாறு உண்டு. ஆகவே முருகன் திருத்திய பாடல்களிலே நாம் பிழை பிடிக்கவோ, திருத்தம் செய்யவோ முடியுமா? காப்புச் செய்யுள்களிலே மூன்றாவதாக வரும் மூவிரு முகங்கள் போற்றி என்ற பாடலும் இதற்கு விதி விலக்கல்ல.

சாதாரண 'புலவர்கள்' எழுதிய பாடல்களிலேயே இலக்கணப் பிழை இருக்காது. சந்தம், ஓசை, எதுகை - மோனை எனப் பல அம்சங்கள் இருக்கும்; சரியாக இருக்கும். பாடிப் பார்த்தால் தடக்கு எதுவும் இல்லாமல் அருவி நீர் ஓடுவதுபோல அவை இருக்கும். மரபுக் கவிதைகள் அவை. அப்படிப் பார்த்தால் மூவிரு முகங்கள் போற்றி என்ற பாடல் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

மேலுள்ள பாடலைப் பிழையறக் கற்றுப் பாடுவோம்.

# சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு தினம்



அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இறைபதம் அடைந்து ஆண்டு ஒன்று நிறைவாகிறது. அவரின் நினைவு தினம் சைவமுன்னேற்றச் சங்கத்திலுள்ள ஸ்ரீசிவ காமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதியில் கடந்த ஆனி மாதம் 19ஆம் நாள், 2009 ஜூலை 3, இல் நடைபெற்றது.

பண்டிதை அவர்கள் பணிகள் பலசெய்து, இறை வழிபாட்டோடு, அல்லலுற்ற பெண்கள் பலருக்கும் ஆதரவற்ற சிறுவருக்கும் ஆதரவு அளிக்கும் ஓர் அன்னையாகவும் வாழ்ந்தவர். அன்னாரின் சேவைகளை நினைவு கூரும் வகையிலும் அவர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்கும் கூட்டுவழிபாடு, பிரார்த்தனை முதலியன நடைபெற்றன. 'பிள்ளையார் பெருமை' என்ற தலைப்பில் அன்னை ஆற்றிய சொற்பொழிவின் ஒலிப்பதிவை அவையோர் கேட்டு மகிழ்ந்தனர்.

அதைத் தொடர்ந்து திரு ஐ தி சம்பந்தன், திரு வ இ இராமநாதன் உள்ளிட்ட அன்பர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள். அன்னை அவர்கள் லண்டன் வந்திருந்தபோது சைவ முன்னேற்றச் சங்க நிகழ்வுகளிலே பங்குகொண்டு சமய உரைகளும் ஆற்றிவர்.
பல வருடங்களாக சைவ முன்னேற்றச் சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் அன்னை அவர்கள்.

# மதயானையினின்றும் தப்பிய அற்புதம்

## திருநாவுக்கரசர் அற்புதங்கள்

இடைக்காடு சயம்பு - இலண்டன்

முந்திய கட்டுரையில் நஞ்சுண்டு பிழைத்த அற்புதம் பார்த்தோம். இனி மதமேறிய கொலை யானையினின்றும் தப்பிய அற்புதத்தைப் பார்ப்போம். சமணகுருமார் திருநாவுக்கரசு நாயனாருக்கு நஞ்சையூட்டினார்கள். அவரோ எவ்வித தயக்கமுமின்றி சிவபெருமானின் நினைவோடு உண்டார். முன்னையினும் திடமாய் ஒளிவீச இருந்தார். இதைக்கண்டு சமணர் "வெருக்கொண்டே, இவ்விடத்தில் இவன் பிழைக்கில் எமக்கெல்லாம் இறுதி!" என்று உணர்ந்து மன்னனிடஞ் சென்றனர். முன் நின்று கூறினார்கள்:- "நீதிநெறி நிற்கும் அரசே! குற்றவாளி தீங்கின்றி இருக்கின்றான். காரணம் எமது சாத்திர விடந்தீர் மந்திரம் - அவன் பயின்று எமக்கெல்லாம் பயிற்றுவித்த மந்திரம் - அதை ஓதிப் பிழைத்திருக்கின்றான். ஐயகோ! 'எஞ்சும் வகை அவர்க்கிலதேல், எம்முயிரும் நின் முறையும் துஞ்சுவது திடம்.' இனி இவனை உயிரோடு இருக்க விட்டால் உனது குருமாராகிய நாம் உயிர் துறப்போம். நினது சமயத்துக்கும் கேடு. உனது நீதி ஆளுமைக்கும் இழுக்கு. நாட்டுக்கும் நலிவு ஏற்படும்' என நவின்றார்கள். சமணர் தனித்தோ குழுவாகவோ வாதில் தோற்றால் தாமாகவே கழுவேறி மாய்ந்து விடுவார்கள். இது அவர்கள் சமய ஒழுக்கம். வேறு யாரும் அவர்களை வலிந்து கழுவேற்ற வேண்டியதில்லை. மேலே கூறியபடி வஞ்சகமாய் வர்ணித்துத் தாம் உயிர் பிழைக்கவும் தங்களுக்கேற்பட்ட அவமானத்தை மறைக்கவும் பழி தீர்க்கவும் வழிகோலினார்கள். மன்னருக்குச் சொன்னார்கள், "அரசே மந்திர சாதனைக்கு இடம் வைக்காமல் இனி வேறு வகையால் தண்டிக்கலாம். இனி உனது ஆனைகளில் மதவெறி மிகவேறிய ஆனையை அவன் மேலேவி விடுவது தான் நிச்சயமான முடிவு". (மத யானையை மந்திரத்தால் அடக்க முடியாது என்று ஒரு நம்பிக்கை உண்டு.) மன்னரும் அப்படியே கட்டளை இட்டார். போர்ப் படையினரும் நடுங்கும்படி கிடுகிடென முடுகிற்று ஒரு மதயானை. அதை நாயனார் மேலேவினர் ஆனைப்பாகர். நாயனார் கண்டார். "வெருளார் சேவிற்றிகழ்பவர் பொற்கழல் தெளிவுற்றனர் பெரியோர்" ஆனையையும் ஆனையை ஊர்ந்து வரும் பாகர்களையும், ஊக்கப்படுத்தும் மற்றைய வன்மையாளர்களையும் கண்ட நாயனார், இடபத்தையும் அதன் மேலூர்ந்து வரும் சிவபெருமானையும் நினைத்து ஊன்றி ஒன்றி நின்று இறைவர் மேல் பாடத் தொடங்கினார். 'சுண்ணவெண் சந்தனச் சாந்தும்', திருநீறு, சந்தனச் சாந்தும் பூசிய இறைவர் என்றெடுத்துப் பாடத் தொடங்கினார்.

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண வுரிவையு டையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறு மகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. - தேவாரம்.

அன்பர்களே, பதிகம் முழுவதையும் படியுங்கள், பொருள் விளங்கும். வீரட்டத்தடியோம் யாம் அஞ்சுவதில்லை என்று பாட்டுத்தோறும் சொல்லிச் சொல்லி அமைந்தார். அஞ்சுவதில்லை என்ற தோடமையாது. அஞ்சவருவதில்லை என்றும் பாடினார். இனி, மேலும் அச்சமில்லை என்றார்; அடித்துச் சொன்னார். இது ஒரு ஆணை. நாயனாரின் இச் சரிதப் பகுதிக்குச் சான்றாக அவர் வேறோரிடத்திற் பாடிய தேவாரப் பாடலில், "தலைவனாகிய ஈசன் தமர்களைக் கொலை செய்யானை தான் கொன்றிடுகிற்குமோ?" (தனிக் குறுந் தொகை) என்று பாடிவைத்தார். இறைவரை நினைந்தார். அவரின் கோலங் கண்டார். திருநீறும் சந்தனமும் அணிந்த கோலம் தோன்றியது.

அப்பரையும் அம்மையையும் உணர்த்தும் பூச்சுக் கோலம். திருமேனி அங்கங்கள் பலவும் குறிக்கிறார். அணிகலன்கள், ஆடைகள், மூவிலை வேல் முதலிய படைகளும் கூத்து வகைகளும், வேழ முரித்த வீரமும், தோலைப் போர்த்த கோலமும், பதிக முழுமையும் கெடிலத் தீரத்தமும் (ஆனைக் காய்ச்சலைக் குளிர்விக்கும் குறிப்பு- ஆணை) திருவதிகைத் தலத்தின் தொடர்பும் "உடையார்" எனத் தலச் சுவாமியின் பெயரும் தொடர்பும் கூறினார். கயமுகாசுரனை அழித்த கணபதியின் -விநாயகப்பெருமான் குறிப்பும் - கூறினார். இராவணன் பாடலில் இரங்கி வரங்கள் கொடுத்த குறிப்பை வைத்தார். அச்சம் என்பது இல்லை என்றார். மதயானை நாயனாருக்கு அஞ்சியது. எம்மிடம் அச்சப்பட வேண்டியதெதுவும் வராது என்றார். எம்+இடம் வராது: யானை வலம் வந்து வீழ்ந்து முனகி வணங்கியது.! வணங்கி எழுந்து நின்றது! நாயனார் அன்பே உருவாக அமர்ந்திருந்தார். காழ்ப்புணர்ச்சியில்லை. நாயனாரின் அருட்பார்வையாலும் இந்த யானை இந்த நிலைக்கு வந்தது என்று கொள்ளலாம். அந்த வேளை வேழத்தை மீண்டும் அங்குசத்தால் குத்தி காதைத்திருகி நாயனார் மேல் ஏவினர் பாகர். யானை பாகர்களைத் தூக்கி வீசிவிட்டு, சமணக் குருமார் மேல் பாய்ந்தது. எய்தவனிருக்க அம்பை நோகலாமா? இத் துன்பங்களுக்குக் காரணமான அமண் குருமாரையறிந்து அவர்களைத் தாக்கியழித்தது. தப்பிய சிலர் மன்னரிடம் ஓடி வீழ்ந்து வணங்கி அலறினார்கள். மன்னர்களைச் சமணகுருமார் வணங்குவதில்லை. மற்ற மதங்களிலும் அப்படியே. ஆனாலும் இங்கே தமது வஞ்சனையைச் சாதிப்பதற்கு வீழ்ந்து வணங்கினார்கள். மன்னரும் இப்போது யானை செய்தது தமக்கும் துன்பம் என்றுணர்ந்தார். கோபித்து இனி என்ன செய்யலாம் என்று கேட்டார். "அரசே எங்கள் சாத்திரங்களில் கற்ற மந்திரங்களால் இங்கும் தப்பி விட்டான். இவனை அடையாளமில்லாமல் அழித்தால் உனக்கு ஏற்பட்ட அவமானந் தீரும்" என்றனர் அமணர். மேலும், "கல்லுடன் பாசம் பிணித்துக் கடலிடைப் பாய்ச்சுவதென்றார்". மன்னரும் அதற்குத் தகுதியான ஏவலாளர்களை நோக்கி, "இந்தக் குற்றவாளியை நீவிர் ஒரு படகில் ஏற்றிப் பெரிய கல்லும் வலிய கயிறுகளும் கொண்டு போய் வழுவாமல் பிணைத்து தூரக் கடலில் வீசிவிடுங்கள்" என்று ஆணையிட்டார்.

தேவாரப் பதிகத்தின் கடைசிப் பாடல்
நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாங்கொண் டெடுத்தா னொன்பது மொன்று மலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை

அன்பர்களே ஓதி உய்மின்!

திருநாவுக்கரசு நாயனாரின் திருவடிகள் வாழ்க!

## "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"

**நாவின் நலம்**

இறைவன் மனிதனுக்கு மெல்லிய நாவினைக் கொடுத்தார். நாக்கை நரம்பில்லாமலும் படைத்தருளினார். நரம்புள்ள பகுதிகள் சுழுக்கிக்கொள்ளும். கை, கால், கழுத்து என்னும் இவைகள் சுழுக்கிக்கொள்ளுகின்றன. நாவில் நரம்பு இருந்தால் அடிக்கடி சுழுக்கிக் கொள்ளும். பேச்சுத் தடைபடும். அற்புதமான கருவி நாக்கு. அந்தநாவால் இறைவனைப் பாடிப் பரவுதல் வேண்டும்.

- திருமுருக கிருபாநந்தவாரியார்
நன்றி: வாரியார் அமுதம்

COMMERCIAL & INDUSTRIAL GUARDING
CALL NOW FOR A FREE SURVEY AND QUOTATION

SECURITY GUARD WANTED

* RETAIL
* CONSTRUCTION
* 24 HOUR RADIO PATROLS
* KEY HOLDING
* ACCESS CONTROL
* CCTV

CHARTER SECURITY
A PROFESSIONAL SERVICE EVERY TIME

1ST FLOOR
CAMBRIDGE ROAD
BARKING
ESSEX
1G11 8NR

TEL: 020 8507 7717
FAX: 020 8507 7702


THIRU & CO
Solicitors
25 YEARS
MR SELVA THIRU
HAS BEEN SERVING THE COMMUNITY
We also deal with:
* COMMERCIAL AND RESIDENTIAL CONVEYANCING
* WILLS AND PROBATE
* FAMILY LAW
* HOUSING LAW
527 Katherine Road
Forest Gate
London
E7 8EB
TEL: 020 8471 9744
FAX: 020 8471 9744
WE PRIDE OURSELVE IN GIVING EXCELLENT SERVICE

# அருணகிரிநாதரின் கந்தர் அந்தாதி

ச வேதநாராயணன்

வாரணத் தானை யயனைவிண் ணோரை மலர்க்கரத்து
வாரணத் தானை மகத்துவென் றோன்மைந் தனைத்துவச
வாரணத் தானைத் துணைநயந் தானை வயலருணை
வாரணத் தானைத் திறைகொண்ட யானையை வாழ்த்துவனே

அருணகிரிநாதர் முருகனின் மேல் பல பாடல்கள் இயற்றியுள்ளார். திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருவகுப்பு, திருவெழுக்கூற்றிருக்கை, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம் முதலியவை. உடற்கூற்று வண்ணம் என்னும் நூல் பட்டினத்தார் பாடியருளியது என்று சிலரும், அருணகிரிநாதர் இயற்றியது என்று சிலரும் கூறுவர்.
இதைத்தவிர, கந்தரந்தாதி என்ற பத்திரசம் பொருந்திய அரிய நூலையும் அருணகிரியார் இயற்றியுள்ளார், இதைப்பற்றி 'கந்தரந்தாதியைப் பாராதே. கழுக்குன்றத்து மாலையை நினையாதே' என்ற ஒரு பழமொழியும் வழங்குகிறது.

இந்நூல் தோற்றத்தைப் பற்றி ஒரு கதை உண்டு. பாரதம் இயற்றிய வில்லிப்புத்தூராருக்குத் தன் புலமையில் முழு நம்பிக்கை உண்டு. ஏனைய தமிழ்ப் புலவர்களை வாதுக்கு அழைத்து அவர்களை வென்று விட்டு, அவர்களுடைய காதுகளை அறுக்கச் செய்வாராம். ஒருமுறை அருணகிரிநாதரையும் வாதுக்கு அழைத்தார். அருணகிரிநாதர் கந்தர் அந்தாதியை பாடல் பாடலாக இயற்றிப் பாடினார். அங்ஙனம் முதல் 53 பாடல்களுக்கு வில்லிப்புத்தூரார் நேர்த்தியாகப் பொருள் விளக்கினார். ஆனால் ஐம்பத்துநான்காவது பாடலைக் கேட்டபோது வில்லிப் புத்தூராருக்கு அப்பாடல் விளங்கவேயில்லை. அருணகிரியார் அப்பாடலைப் பிரித்துப் பொருளை விளக்கியவுடன் வில்லிப்புத்தூரார் தன் தோல்வியை ஒப்புக்கொண்டார். பாரத ஆசிரியர் தன் காதுகளை அறுக்க முயன்றபோது அருணகிரியார் அச்செயலைத் தடுத்தார். வில்லிப்புத்தூரார் திருப்புகழ் ஆசிரியரை கருணைக்கோர் அருணகிரி என்று புகழ்ந்ததாகக் கதை சொல்கிறது. அதன் பிறகு அருணகிரியார் அந்தாதியின் மீதி 46 பாடல்களையும் இயற்றி அந்நூலை நிறைவு செய்தார். வில்லிபுத்தூராரை வியக்கவைத்த அந்த ஐம்பத்து நான்காம் பாடலைப் பார்ப்போம்.

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே

இப்பாடலைப் படிப்பதே அவ்வளவு சுலபமாக இல்லை. இதைப் பிரித்தாலாவது புரிகிறதா என்று பார்ப்போம்.

திதத்தத் தகதித்த திதி தாதை தாத துத்தி தத்தி
(தா) தித தத்து அத்தி ததி தித்தித்திதே து துதித்து இதத்து
(ஆ) தி தத்தத்து அத்தி தத்தை தாத திதே துதை தாது அதத்து
(உ) தி தத்து அத்து தித்தி தீ தீ திதி துதி தீ தொத்ததே

படிக்க முடிகிறது. ஆனால், பொருள் விளங்குகிறதா? ஒரே சொல்லுக்கு உள்ள பல பொருள்களைப் பாருங்கள்.

பதவுரை:

திதத்த ததித்த - திதத்த ததித்த என்னும் தாள வரிசைகளை, திதி - தன் நடனத்தின் மூலம் நிலைப்படுத்துகின்ற, தாதை - உன் தந்தையாகிய சிவனும், தாத - பிரமனும், துத்தி - புள்ளிகள் உடைய படம் விளங்கும், தத்தி - பாம்பாகிய ஆதிசேடனின், தா - முதுகாகிய இடத்தையும், தித - இருந்த இடத்திலேயே நிலைபெற்று,தத்து - அலைவீசுகின்ற, அத்தி - சமுத்திரமாகிய திருப்பாற்கடலையும் (தன்இருப்பிடமாகக் கொண்டு) ததி - ஆயர்பாடியில் தயிர், தித்தித்ததே - இனிப்பாக இருக்கிறதே என்று கூறி, து - அதை வாரி உண்டவிட்டுணுவும், துதித்து - போற்றி வணங்குகிற, இதத்து - பேரின்ப சொரூபியாகிய ஆதி - மூலப்பொருளே, தத்தத்து - தந்தங்களை உடைய, அத்தி - யானையாகிய ஐராவதத்தால் வளர்க்கப்பட்ட, தத்தை - கிளி போன்ற தேவயானையின், தாத - தாசனே, திதே துதை - பல தீமைகள் நிறைந்ததும், தாது - ரத்தம், மாமிசம் முதலிய சப்த தாதுக் களால் நிரப்பப்பட்டதும் அதத்து உதி - மரணம் பிறப்பு இவைகளோடு கூடியதும், தத்து அத்து - பல ஆபத்துகள் நிறைந்ததும் (ஆகிய)
அத்தி தித்தி - எலும்பை மூடியிருக்கும் தோல் பை (இவ்வுடல்)
தீ - நெருப்பினால், தீ - எரிக்கப்படும்.
திதி - அந்த இறுதி நாளில், துதி தீ - உன்னை இவ்வளவு நாள்களாக துதித்து வந்த என்னுடைய புத்தி, தொத்ததே - உன்னிடம் ஒருங்கு இணைந்து விட வேண்டும்

பொழிப்புரை:
கூத்தப்பெருமானாகிய சிவபெருமானும் பிரம்மனும் இடைச்சேரியில் தயிர் உண்டு பாற்கடலையும் ஆதிசேடனையும் படுக்கையாகக் கொண்டு யோகநித்திரை செய்யும் திருமாலும் வணங்குகின்ற ஆதி முதலே, தேவயானையின் தாசனே, பிறப்பு இறப்புக்கு இடமாய் ஏழு தாதுக்கள் நிறைந்த பொல்லாத இந்த உடம்பை தீயினால் எரிக்கும்பொழுது, உன்னைத் துதித்து வந்த என் சித்தத்தை உன்னுடைய திருவடிக்கு நீ ஆட்படுத்த வேண்டும்.

கந்தர் அந்தாதியின் இறுதிப் பாடலுடன் (நூறாவது பாடல்) இக்கட்டுரையை நிறைவு செய்வோம்.

செல்வந் திகழும் மலநெஞ்ச மேயவன் றெய்வமின்னூர்
செல்வந் திகழு நமதின்மை தீர்க்கும் வெங்கூற்றுவர்க்குச்
செல்வந் திகழுந் திருக்கையில் வேறினை காத்த செல்வி
செல்வந் திகழு மணவாள னல்குந் திருவடியே

நன்றி: விளக்க உரை திருப்புகழ் அடிமை திரு சு. நடராசன் அவர்கள் www.kaumaram.com

புமியதனிற் பிரபுவான புகலியில்வித் தகர்போல
அமிர்தகவித் தொடைபாட அடிமைதனக் கருள்வாயே
சமரிலெதிர்த் தசுர்மாள தனியயில்விட் டருள்வோனே
நமசிவயப் பொருளானே ரசதகிரிப் பெருமாளே
- திருப்புகழ்

# 20 06 2009 முதல் 29 06 2009 வரை சைவ ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர்









# முன்னேற்றச் சங்கமனையில் எழுந்தருளியுள்ள சந்நிதியில் நடைபெற்ற ஆனி உத்தர விழா












# மனித வாழ்வில் ஜோதிடம் மாபெரும் பொக்கிஷம்

துன்னையூர் கலாநிதி ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்

## துலாம் லக்னம்:



துலாம் லக்னம் லக்ன வரிசையில் ஏழாவது லக்னமாக அமைகின்றது. இந்த லக்னத்தின் அதிபதி சுக்கிரன். களத்திரக்காரகன், சுக போகக்காரகன் எனப்படும் சுக்கிரக் கிரஹகம். இந்த துலா லக்னத்தின் ஆதிபத்தியத்தை தனதாக்கிக் கொள்கிறார். இந்த லக்னம் உடையவர்கள். சகலகலா வல்லவர்கள் என்றே கூறலாம். ஆளுமை, அறிவு, புகழ், பணம், பெருமை, என எல்லாவிதமான பொக்கிஷ நிலைகளும் இவர்களை வந்து சேரும். இவர்களின் வாக்குஸ்தான அதிபதியாய் செவ்வாய் அமைவது, தமது பேச்சின் வசீகரத்தால், சொத்துக்கள் சேர்க்கின்ற திறமை இருக்கும். சுக, பஞ்சம ஸ்தான அதிபதி சனீச்சரன் இவர்களின் லக்னத்தில் உச்சம் எனும் நிலையைப் பெறுவதால், கல்வி நிலை சிறப்பாக இருக்கும். அப்படிக் கல்வியில் சிறப்பு இல்லாவிடினும் உயர்ந்த கற்றோர் சபையில் இவர்களுக்கு மதிப்பும் கௌரவமும் நிறைந்து இருக்கும். நீதியான செயற்பாட்டை விரும்புகின்ற மனம் கொண்டவர்கள். தாங்கள் ஒரு தவறைச் செய்தால் அதை நினைத்து வருந்தி அதற்கு பரிகாரமும் செய்யும் மனநிலையுடையவர்கள். மனச்சாட்சிக்கு விரோதமாக எந்தக் காரியமும் செய்யத் துணியமாட்டார்கள். இந்த லக்னத்திற்கு சனீச்சரன், புதன், சுக்கிரன் சுபகிரஹங்களாக அமைகின்றார்கள். சந்திரனும், புதனும் யோகாதிபதிகள். இவர்கள் ஜாதகத்தில் சேர்க்கை பெற்றால் பிரபல யோகம் ஏற்படும். ஜாதக ரீதியில் இந்த லக்னம் உடையவர்களுக்கு சுக்கிரன், புதன், சனீச்சரன், கேந்திர ஸ்தானங்களில் அமையப் பெற்றாலோ அல்லது ஆட்சி உச்ச நிலைகளில் அமைந்தாலோ ராஜயோகமான வாழ்க்கை அமையும். இந்த லக்னம் உடையவர்களுக்கு தொழில் ஸ்தான அதிபதியாகச் சந்திரன் அமைவது சிறப்பு. இருப்பினும் ஜனனமாகும் காலங்களில் தேய்பிறை சந்திரனாகி நீசம் பெற்று அமையப்பெறின் தொழில் நிலைகளிலே பலவித அலைச்சல்கள் இருக்கும். லாபஸ்தான அதிபதியாக சூரியன் அமைவது பணவரவும், பொருள் சேர்க்கையும் மிகவும் சிறப்பாக அமைகின்ற பலன் இவர்களுக்கு உண்டு. சுக போகக்காரகன் சுக்கிரனின் ஆதிபத்தியம் இவர்களுக்கு எதிர்பாராத வகையிலே நன்மைகளும் அதிஷ்டங்களும் கொடுக்கின்ற நிலையுண்டு. அதிலும் லக்னாதிபதி சுக்கிரன் பலம் பொருந்தி கேந்திர ஸ்தானங்களில் இருப்பின் மிகவும் சிறப்பான பலன்கள் அமையும் நிலையுண்டு. பொதுவாகவே எந்த விடயத்தையும் பொறுமையுடனும் நிதானத்துடனும் செய்யக்கூடிய வல்லமை உடையவர்கள். எவருமே செய்ய முடியாத சில விடயங்களையும் மிகவும் சாதாரணமாகவும் எல்லோரும் வியக்கும் வகையிலும் செய்து முடிக்கின்ற ஆற்றல் உடையவர்கள். இந்த லக்னம் உடையவர்களுக்குக் களத்திரஸ்தானம் செவ்வாய் கிரகத்தின் ஆதிகத்திலே அமைவது மனைவி வழியால் சொத்துக்கள் சேருகின்ற நிலை இருக்கும். சில அன்பர்களுக்கு இரு தாரம் அமைகின்ற பலனும் உண்டு. அதற்கு கிரஹ நிலையிலே லக்னாதிபதி சுக்கிரனும் களத்திரக்காரகன் செவ்வாயும் அமைகின்ற ஸ்தான நிலைகளே மூல காரணமாகின்றன. தாய் தந்தையரிடம் நல்ல பரிவும் உறவினர்களை நேசிக்கின்ற பண்பும் இவர்களிடம் அதிகம் இருக்கும். மனைவியின் மேல் அதிகபிரியம் உடையவர்களாக இருப்பார்கள். பெண்களின் நட்பில் பலவித பிரசினைகளை எதிர்கொள்வார்கள். வியாபார தொடர்பு உடைய கல்வியும், அது சார்ந்த தொழிலும்

இவர்களுக்கு நல்ல மேன்மையைக் கொடுக்கும். வசீகரம், கவர்ச்சி எவரையும் தம் வசப்படுத்துகின்ற செயற்திறன் என்பன இவர்களிடம் அதிகமாக இருக்கும். வெண்மைநிறம், மெல்லிய நிறங்கள் இந்த லக்ன அன்பர்களுக்கு மிகவும் உகந்ததாக அமையும். வைரம் மிகவும் அதிஷ்டம் தரும் ரத்தினக்கல்லாக அமைகின்றது. அம்பாள் வழிபாடு உத்தம பலன் கொடுக்கும். சுபக்கிரஹங்களின் பார்வை பெறும் நிலையிலே 85 ஆண்டுகள் வாழ்கின்ற நிலை அமையும்.


## விருச்சிக லக்னம்.

விருச்சிக லக்னம் லக்ன வரிசையில் எட்டாவது லக்னமாக அமைகின்றது. இந்த லக்னத்தின் அதிபதி செவ்வாய். ப்ராத்ரு காரகன் சகோத ரகாரகன், பூமிகார கன் எனப்படுகின்ற செவ்வாய்க் கிரஹம் இந்த



லக்னகாரர்களின் ஜென்ம ரோகஸ்தான அதிபதியாக அமைகின்றார். இவர்களின் வாக்குஸ்தான அதிபதியாக குரு அமைவது, அறிவுபூர்வமான பேச்சாற்றல், ஆழ்ந்த கருத்துக்கள், பலருக்கும் அறிவுரை சொல்லுகின்ற ஆற்றல் என்பன இருக்கும். இந்த லக்னம் உடையவர்கள் உயர் கல்வி விடயங்களிலே சற்று அதிக கவனம் செலுத்த வேண்டிய நிலை இருக்கும். சுகஸ்தான அதிபதியாக சனீச்சரன் அமையப் பெறுவது பட்டப்படிப்பு விடயங்களில் சுலபமாக செயற்பட முடியாத நிலை இருக்கும். பெரும்பாலும் இந்த லக்னமுடையவர்கள் அரசாங்க தொடர்பு உடைய தொழில் பார்க்கின்ற நிலை அமையும். அல்லது தொழில் ரீதியாக அரசாங்கத் தொடர்புகள் அதிகம் அமைகின்ற நிலை இருக்கும். புத்திக்கூர்மை மிகவும் அதிகமாக கொண்டவர்கள். தாம் நினைக்கின்ற காரியத்தை சாதுர்யமாக செய்து முடிக்கும் ஆற்றல் அதிகம் கொண்டவர்கள். தனக்கு எதிரி என்று நினைத்துவிட்டால் எந்த வகையிலும் வஞ்சம் தீர்க்க தயங்க மாட்டார்கள். கோபத்தையும் ஆவேசத்தையும் மிகவும் கடுமையாக கொண்டிருப்பார்கள். பாடுபட்டு உழைக்கும் குண இயல்பு மிகவும் அதிகமாக இருக்கும். இந்த லக்ன அன்பர்களுக்கு சனீச்சரன் பெருநன்மை கொடுக்கமாட்டார். சூரியன், சந்திரன், குரு சிறப்பான சுபகிரஹங்களாக அமைகின்றன. இந்த லக்னத்திலே சயாக்கிரஹங்கள் ராகு கேது உச்சம் பெறுகின்றன. இந்த லக்ன நிலையில் சந்திரன் நீசம்பெறினும் பாக்கியஸ் தானாதிபதி என்கின்ற யோக நிலையைப் பெறு கின்றார். குருமஹாதிசை, சந்திரதிசை என்பன இந்த லக்னமுடைய அன்பர்களுக்கு மிகவும் ராஜயோகமான பலன்களைக் கொடுக்கும். எந்த விடயத்தையும் தீர்க்க தரிசனத்தோடு செய்கின்ற ஆற்றல் உடையவர்கள். உறவினர்களோடு ஒற்றுமையாக இருக்கின்ற தன்மைகள் இவர்களிடம் குறைவாகவே காணப்படும். பகைவர்களை சாதுரியமாக வெற்றிகொள்ளும் ஆற்றல் இவர்களிடம் இருக்கும். களத்திரஸ்தான அதிபதியாக சுக்கிரன் அமைவது இவர்களுக்கு அமைகின்ற மனைவி நல்ல வசதிகளும் வசீகரமும் உள்ளவராக இருப்பார். அதே நேரம் மனையாளிடம் நல்ல அன்பும் பாசமும் கொண்டவர்களாக மனைவி சொல் கேட்பவர்களாக இவர்கள் இருப்பார்கள். ஜாதகத்திலே இவர்களுக்கு சூரிய சந்திரர் சேர்க்கை அமையப்பெற்றால் பிரபல யோகம் கொடுக்கும். அசையா சொத்துக்கள் எனப் படும் பூமி, நிலங்கள் இவர்களுக்கு அதிகம் சேருகின்ற நிலையுண்டு. தாய் தந்தை உறவுகள் தனது சுயநலத்தோடு அமைத்துக் கொள்வார்கள். சகோதரர்கள் அதிகமாக இருப்பினும் அவர்களுடன் அந்நியோன்யமாக இருக்கமாட்டார்கள்.


இந்த லக்னம் உடையவர்கள் சிவப்பு வர்ணம் சேர்த்துக் கொள்வது மிகவும் அதிஷ்டமானது. அதிஷ்ட ரத்தினக்கல் பவளம் அணிந்து கொள்ளலாம் இந்த லக்னமுடையவர்களுக்கு முருகன் வழிபாடு மிகவும் உகந்ததாக அமையும். சுபக்கிரஹங்களின் பார்வை அமைகின்ற நிலையில், 90 ஆண்டுகள் வாழ்கின்ற பேறு உடையவர்கள்.


Jeya & Co Solicitors
We Specialise in
Conveyancing (Commercial & Residential )
Immigration & Nationality
Wills & Probate
Landlord & Tenant
Employment
Liquor Licensing
322 High Street North
Manor Park
London E12 6SA
Web: www.jeyaandsolicitors.co.uk
Email: info@jeyaandco.co.uk
332 High street North
Manor Park
London E12 6SA
Tel: 020 8552 1999
Fax: 020 8552 9933
Partners: Malathy Jeyanantham LLB
Kavina Ponnambalam LLB


FOOD CITY
234-236, LONDON ROAD, CROYDON, CR0 2RL
Best Sri Lankan &
Indian Grocers in Croydon
கிரி கடை
இலங்கை மளிகைப்பொருள்கள்
அனைத்து விதமான பானங்கள். பேக்கரி
அனைவருக்கும் ஏற்ற ஆடைவகைகள்
பட்டுப்புடைவைகள். பரிசுப்பொருள்கள்
வீடியோ, ஓடியோ, இசைத்தட்டுக்கள்
உங்கள் கொண்டாட்டங்களுக்கான அலங்காரங்கள்
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
CONTACT
020 86817485 ,
07984 149 083

# எது செய்தாலும் அழகு

## சங்கீதபூஷணம் திரு ப முத்துக்குமாரசாமி



ஒரு ஞாயிற்றுக்கிழமை பகல் நேரம் தேசிகர் வீட்டுக்குச் சென்றேன். அங்கே குழிக்கரைப் பிச்சையப்பா அவர்கள் (பிரபல நாதஸ்வர வித்துவான்) தேசிகர் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்கள்.

தமிழ் இசை வளர்ச்சியிலே - ஓதுவார்களையும் நாதஸ்வர வித்துவான்களையும் மறந்துவிட முடியாது. "ஓதுவார்கள் இல்லையென்றால் நம் பழந்தமிழ்ப் பண்கள் ஏது? நாதஸ்வர வித்துவான்கள் இல்லையென்றால் ராகம் ஏது?" என்றார் தேசிகர். "ஆமா! ஆமா! அது உண்மையான பேச்சு" என்றார் பிச்சையப்பாபிள்ளை அவர்கள்.

'இந்த இசை எப்போது தோன்றியது?' என்று கேட்டார் பிச்சையப்பா பிள்ளையவர்கள். 'இதன் காலத்தைக் கணக்கிடமுடியாது. மிகத் தொன்மையான காலந்தொட்டு இசை இருந்துவருகிறது. இசையின் சிறப்பினைப் போற்றி சுபபந்துவராளி ராகம், ஆதி தாளத்தில் நான் ஒரு பாடல் எழு தியிருக்கிறேன்' என்றார் தேசிகர். உடனே பிள்ளயைவர்கள், 'தயவு செய்து அதை ஒருதரம் பாடிக் காட்டவேண்டும்' என்றார்கள். தேசிகர் தமது கம்பீரமான மதுரக் குரலிலே பாடினார்கள். தேசிகர் அவர்கள் பாடியதே நாதசுர ஓசைபோலக் கம்பீரமாகவும் சுநாதமாகவும் இசை அழகுடனும் அப்படியே என் மனதைக் கொள்ளைகொண்டது.

பல்லவி

இசையின் எல்லையை யார் கண்டார் என்று
இயம்பிடுவாய் மனமே....... இனிமை தரும் - இசையின்

அநுபல்லவி

அசைவும் குழைவும் கொண்டு அமுதமெனப் பொழிந்து
அளவிடற் கியலாத அமைவு பெற்றிலங்கும் நம் - இசையின்

சரணம்

காலங்கண்டறியாத இசையினை முதன்முதல்
கருத்தினில் நினைத்தவர் எவர்தானோ - அதன்
மூலம் முடிவு என்னும் முறை ய அறிந்திட
முயற்சி செய்வோர்க்கெல்ல ம முதன்மையாய்த் திகழும் நம் - இசையின்

'ஆஹா!, ஆஹா!, என்ன பொருள் நிறைந்த இனிமையான பாடல். இதனை இன்றைக்கே நான் ஸ்வரப்பண்ணிக் கொள்ளுகிறேன்' என்று உடனேயே நாதஸ்வரத்தை எடுத்து வாசிக்க விளைந்தார்கள் பிச்சையப்பா பிள்ளை அவர்கள். தேசிகரும் அவருக்கு நிதானமாகப் பாடிக்காட்டி உதவினார்கள்.

"இதோ வந்துவிடுகிறேன்" என்று சொல்லித் தே கர் எழுந்து உள்ளே சென்றார். என்னைப் பார்த்துப் பிள்ளளையவர்கள் சொன்னார், "தம்பி! தேசிகரிடம் பாட்டும் கத்துக்கலாம். பெரும் பழக்க வழக்கங்களையும் கற்றுக்கொள்ளலாம். அவர் கால் கழுவுகிறார் என்றாலும் அதில் ஒரு படிப்பினை இருக்கும். அவர் எது செய்தாலும் அதில் ஓர் அழகு - பண்பு இருக்கும். எனவே அவரிடம் மிகுந்த பத்தி சிரத்தையுடன் பயிலுங்கள்" என்று சொன்னார்.

திரும்பி வந்து அமர்ந்த தேசிகர் - 'முத்துக்குமாரசாமி! இவர் யார் தெரியுமா?' - என்று கேட்டுவிட்டு - 'இவர்தான் பிரபல நாதஸ்வர வித்துவான் குழிக்கரைப் பிச்சையப்பாபிள்ளை - தமிழ் இசைமேல் உள்ள ஆர்வத்தினால் குழிக்கரையிலிருந்து இங்கு வந்து தமிழ்ப் பாடல்கள் கவனம் செய்கிறார்கள். பேரோடும் புகழோடும் இருந்தாலும் தமிழிசை மீதுள்ள பற்றின் காரணமாக இன்றும் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற பெரும் எண்ணம் கொண்டு வந்துள்ளார்கள். இத்தகைய பெரியவர்களிடம் சிறந்த பண்புகளைக் கற்றுக்கொள்ளவேண்டும். அதன்படி நடக்கப் பழகவேண்டும் - தெரியுதா?' என்று சொல்லி முடித்தார்கள்.

இருவரும் ஒருவர் பண்பை ஒருவர் பாராட்டிக் கூறியதைக் கேட்டு 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பதை அங்கே அன்று உணர்ந்துகொண்டேன். பிள்ளையைவர்களைப்போல தேசிகர் ஐயாவிடம் A.K.C அவர்கள், காருகுறிச்சி அருணாசலம்பிள்ளை அவர்கள் எல்லாம் உருப்படிகள் பாடம் பண்ணியுள்ளார்கள். இது தவிர, கவிஞர் மருதகாசி, இயக்குனர் வலம்புரி சோமநாதன், உடுமலை நாராயணகவி போன்றோர் அடிக்கடி வந்து தேசிகர் அவர்களுடன் அளவளாவிச் செல்வார்கள். கண்ணாரக் கண்டு களித்திருக்கிறேன்.

---


*இசைப் பேரரசு திரு M M தண்டபாணிதேசிகர் அவர்களுக்கு இவ்வருடம் நூற்றாண்டு. எட்டயபுரம் சமஸ்தான வித்துவானாகவும் தருமபுர ஆதீனத்தின் இசைப் புலவராகவும் திருவாவடுதுறை ஆதீனத்து தலைமை இசை வித்துவானாகவும் பல பெருமைமிக்க பதவிகளை வகித்தவர் தேசிகர் அவர்கள். தமிழிசைக்குத் தனியிடம் வேண்டும் என்று பல தமிழ்ப் பாடல்களை எழுதி மெட்டமைத்துப் பாடிப் புகழ் சேர்த்தவர்கள். தமிழ்நாட்டில் அவருக்கு பல இடங்களிலும் தமிழிசை அபிமானிகள் விழா எடுத்து வருகிறார்கள். தேசிகர் அவர்களின் அன்புக்கும் அபிமானத்துக்கும் ஆதரவுக்கும் பாத்திரமானவர் ஈழத்திலிருந்து இசை கற்கச் சென்ற மாணவர் சங்கீதபூஷணம் திரு ப முத்துக்குமாரசாமி அவர்கள். இசை கற்கவென அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்குச் சென்ற அவர் தேசிகர் அவர்களாற் பெரிதும் ஈர்க்கப்பட்டார். 'என் இதயத் தடாகத்தில் இசையரசர்' என்று தமது நினைவுகளை, அநுபவங்களை ஒரு புத்தகமாக வெளியிட்டுள்ளார். அவரின் அந்த நூலில் இருந்து ஒரு கட்டுரை தேசிகர் நூற்றாண்டு நினைவாக இங்கே பிரசுரமாகியுள்ளது. இதற்கு அநுமதி அளித்த சங்கீதபூஷணம் திரு ப முத்துக்குமாரசாமி அவர்களுக்கு கலசம் நன்றி தெரிவிக்கிறது.*

## இசைப்பேரறிஞர்...... சில நினைவுகள்

அவருடன் (தேசிகர்) வாசித்ததால் எனக்குத் தமிழிசையில் ஈடுபாடு அதிகமானது என்பதே உண்மை. அவரின் பல பாடல்களை நான் தனிக்கச்சேரிகளில் (solo) வாசித்தவன். என் சீடர்கள் அனைவருக்கும் கற்றுக்கொடுத்திருக்கிறேன். தமிழிசை மன்ற நிகழ்வுகளின் தனிக் கச்சேரிகளில் அவரின் பல பாடல்களை வாசிப்பேன்.

தமிழ் என்று வெறும் வாயாற் பேசிக்கொண்டு இருக்கும் உலகில் தமிழிசைக்கு உண்மையாகத் தொண்டாற்றி, தமிழிசைக்காகவே வாழ்ந்து, தமிழிசையாகவே நிறைந்திருக்கும் தண்டபாணி தேசிகர் இசையுலகில் தனி முத்திரை பதித்த இசைப்பேரறிஞர் என்பதில் ஐயமில்லை.


**பத்மபூஷன் லால்குடி ஸ்ரீ ஜி ஜயராமன்- நன்றி: அரனருள்**


KS
KENTON SOUND
Sound, Dj & lighting
Over 16Years Experience In the UK
Sound Equipment, Lighting Systems, Radio Mics and Pyrotechnics for Hire
பிரபல இந்தியப் பாடகர் S.P. பாலசுப்பிரமணியத்தின் பாராட்டைப் பெற்ற நிறுவனம்
All our electrical equipments are PAT tested
Public Liability Insured
Call Balan
020 89077588
07976922136

# துவாரகா

## முத்தித் தலங்கள் - பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் டாக்டர்.க.கதிர்காமநாதன்



துவாரகா குஜராத்தின் மேற்குக் கரையில் இருக்கும் ஒரு முனையில் உள்ள இடமாகும். துவார் என்றால் துவாரம்- ஒரு எல்லையில்லா இன்பத்திற்கு வாசல் என கூறுவர். இதை துவாரகை துவாரமதி, துவாரகையை, துவாரகாபுரி, துவாரவபதி எனவும் அழைப்பர்.

இங்கேதான் கிருஷ்ணபகவான் அரண்மனை அமைத்து 36 வருடகாலம் அரசாண்டார். மீரா வெகு தூரத்திலிருந்து பக்தி மேலீட்டால் பாடிக்கொண்டு வந்து பகவானோடு ஐக்கியமானதும் துவாரகாவில்தான். இதை விட கிருஷ்ணரின் ஆப்த நண்பரான குசேலர், கிருஷணரைச் சந்தித்து தனது வறுமையைப் போக்கிய இடமும் இதேதான். தனது பெருவிரலையே குரு தட்சணையாக கொடுத்த ஏகலைவனும் துரோணாசாரியாரும் வசித்த இடமாக இது விளங்குகிறது. மகாபாரதமும் விஷ்ணுபுராணமும் துவாரகாவைப்பற்றிக் கூறுகின்றன.

துவாரகாவில் இருக்கும் கிருஷ்ணபகவானின் கோயில் தான் முத்தித் தலமாகும். துவாரகாவென்று ஒருவர் கூறினால் இத்தலம் தான் முன் நிற்கும் சிதம்பரம் மாதிரி. இத்தலத்தை 'ஜகத் மந்திர்' உலகத்தின் கோயில் என அழைக்கின்றனர். இப் பிரபல்யமான கோயிலை முதல் நான்கு யாத்திரைத் தலங்களில் ஒன்றாக கருதுகின்றனர்.

கிருஷ்ணபகவான் திருமாலின் ஒன்பதாவது அவதாரமாகும். இவரை கண்ணன், கேசவன், கோவிந்தன், கோபாலன், தாமோதரன் என்று பல பெயர்களாலும் அழைக்கின்றனர். கிருஷ்ணன் ஞானிகளுக்கு உண்மைக்கு எடுத்துக்காட்டாகவும், தெய்வமாகவும் கோபியருக்கு அன்பிற்கும் காதலுக்கும் உறைவிடமாகவும் போர் வீரனுக்கு சிறந்த தலைவராகவும் கம்சனுக்கு எதிரியாகவும் அருச்சுனனுக்கு உற்ற நண்பனாகவும் கீதையை உபதேசிக்கும் போது ஆசிரியனாகவும் திகழ்ந்தார். இதைத்தான் பாரதியார்.

"நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனாய் பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்" எனப் பாடினார். இவற்றால் திருமாலின் அவதாரங்களில் கிருஷ்ண அவதாரம் மனிதனாய், தெய்வமாய் இருந்ததால் 'பூர்ண அவதாரம்' ஆகும்.

துவாரகாவை நாங்கள் 24.09.2008 அன்று மாலை அடைந்தோம். 2002 ஆண்டு தொடக்கம் துவாரகா செல்ல வேண்டும் செல்ல வேண்டும் என்ற ஆவல் ஆசை இன்று தான் நிறைவேறியது. துவாரகா கோயில் அதன் புகழ்போன்று மிக பிரமாண்டமானது. 1400 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட 540 மீட்டர் அல்லது 1772 அடி கொண்ட பரப்புடைய ஆலயமாகும். இதன் உயரம் 51மீட்டர்- 167அடியாகும்.

கோயில் அருகில், கோமதி நதி அரேபிய சமுத்திரத்தோடு சங்கமமாகிறது. ஆன்மிக வாதிகள்

நதிகள் கலக்குமிடத்தைப் புண்ணிய பூமியாக, பாவம் தீர்க்கும் இடமாகக் கருதுவர். கோமதி நதி சங்கமத்தில் ஏகாதசியன்று நீராடுவது விசேடமாகும். கிருஷ்ண பகவானை தரிசிக்க வருவோர் முதலில் இச் சங்கமத்தில் நீராடுவர். இதன் பின்னர் பூக்களால் நதிக்கு மலர் அஞ்சலி செய்வர். இதன் பின்னர் 56 படிகள் ஏற வேண்டும். நாம் ஏறும்போது 'ஜெய் துவாரநாத், ஜெய் கோமதி மைய சமுத்திர மகராஜ்தி ஜெய்' என்று மக்கள் கோஷமிடுவதைக் கண்டு, கேட்டுப் பரவசமானோம்.

ஐந்து மாடங்களையும் அறுபது தூண்களையும் கொண்ட பிரமாண்டமான கோயில் இது. சிற்ப கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இத்தலத்தில் கிருஷ்ண பகவான் மேற்கு திசை பார்த்தபடி அருள் பாலிக்கின்றார். மூன்று அடி உயர கறுப்புக்கல் விக்ரகமாக, சங்கு சக்கர கதாபாணியாக சிம்மாசனத்தின்மேல் நின்ற நிலையில் அரசாள்கின்றார். கிருஷ்ணா என்றால் சமஸ்கிருத மொழியில் 'இருள்' என்பதே. ஆன்மாவும் இருள் தான்- தெரிவதில்லை புரிவதில்லை இதனாற்றால் போலும் கிருஷ்ண பரமாத்மா என அழைக்கின்றனர்.

கிருஷ்ண பகவானை எதிரே நோக்கியபடி தேவகிமாதா கோயிலுள்ளது. சிறு கோயில்தான். தேவகிமாதாதான் கிருஷ்ணனின் உண்மைத் தாயாகும். துவாரகா கோயிலைச் சுற்றி முப்பத்தி மூன்று (33) கோயில்கள் உள. ஆதிசங்கரர் சரஸ்வதி பீடமும் உண்டு. துவாரகா கோயிலில் துலாபாரம் மிக விசேடமானது. இது ஒருவரின் எடைக்கு சமமான தங்கம் வெள்ளி பழவகைகள் காய்கனிகள் அரிசி போன்ற பொருள்களை இறைவனுக்கு அளிக்கும் தானமாகும். கோமதி மாதா கோயில் கிருஷ்ண பகவானை தரிசித்த பின்னர் அருகிலுள்ள இக் கோயிலுக்கு சென்றோம். நதி கடலோடு கலக்குமிடத்தில் இது அமைந்துள்ளது. உட்செல்லும் போது கோமதி மாதாவின் பாட்டுக்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. கோமதி நதி கங்கை நதியின் கிளையாகும். இந்நதியை முதன் முறையாக முன்பு நைமிசாரணியத்தில் புனித நதியாக கண்டு நீராடினோம்.

ருக்மணி கோயில்- துலாபாரம் இக்கோயில் கோமதி மாதா கோயிலைவிடப் பெரிதாகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் இருந்தது. கிருஷ்ணரின் முதன் மனைவி தான் ருக்மணி. இவரை சீதேவியின் அவதாரமாகக் கருதுகின்றனர். ஆடம்பரமின்றி, எளிமையாக, துளசியை சூடிக்கொண்டிருப்பார். இளைய மனைவியான சத்தியபாமா விலையுயர்ந்த ஆடை அணிகளால் தன்னை அலங்கரித்துக் கொண்டு பவிசாக மிக ஆடம்பரமாக இருப்பார். பூதேவியின் அம்சமான இவள் செல்வச் செருக்கால் தானே உயர்ந்தவள் எனக் கர்வம் கொண்டாள்.

ஒரு நாள் நாரதமுனிவர் சத்யபாமாவிடம் சென்று வீணையை மீட்டி நன்கு பாடினார். பாடலுக்கு மகிழ்ந்த சத்யபாமை இதற்கு என்ன வேண்டும் என்று கேட்டாள். முனிவர் கிருஷ்ணனைத் தாரும் என்றார். கிருஷ்ணனை எவ்வாறு கொடுக்க முடியும்? அவருக்கு சமமான பொன்னும் பொருளும் ஆடை அணிகளும் தருவேன் என்றார். கிருஷ்ணரை ஒரு தட்டில் ஏற்றி மறுதட்டில் பொன் பொருள் மணி ஆபரணங்கள் ஆடைகள் யாவற்றையும் வைத்தார். நிறை சரிபடவுமில்லை, தட்டு நகரவுமில்லை. அவள் கையில் தட்டிலிட யாதுமில்லை. வெட்கினாள். நாரதர் ருக்குமணியை கூப்பிட அவள் வந்து மனதார கிருஷ்ணரை வணங்கினாள். பின்னர் அவரை வேண்டி அவரது பாதத்தில் தான் அணிந்திருந்த துளசியில் ஒரு இலையை வைத்தாள் உடனே தராசு சமமாக நின்றது. மானசிகமான அன்பும் எளிமையும் தான் கிருஷ்ணனின் இதயத்தைக் கவர்ந்தது கண்டு சத்யபாமா நாணி வெட்கி ருக்மணியை வணங்கி செருக்கொழிந்து திருந்தினாள். இக்கதை இறைவனுக்கு பொன்னும் பொருளும் கொடுத்து விழாக்கள் செய்வதிலும் பார்க்க பரிபூர்ண பக்தியுடன் ஒரு இலையையோ பூவையோ கற்பூரக் கட்டியையோ சமர்ப்பித்தால் அது மேலானது என்ற தத்துவத்தை பறைசாற்றுகிறது.

நாகேஸ்வரலிங்கம்- ஜோதிலிங்கம்

எமை அழைத்துச்சென்ற கார் சாரதி துவாரகா கோயிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள இக்கோயிலுக்கே முதல் கொண்டு சென்றார். மஹாராஷ்டிரர்கள், குஜராத்தில் உள்ள இக் கோயிலை ஜோதி லிங்கமாக தரிசிக்கின்றனர். உட்சென்ற நாங்கள் முதலில் கிணறு கண்டு நீர் மொண்டு முகம் கை கால் அலம்பி உட்சென்றோம். கூட்டம் இல்லை படமெடுக்கும் பாம்பு குடை பிடிக்க நாகேஸ்வர லிங்கத்திற்கு இலை பூ வைத்து வணங்கினோம்.. அங்குள்ள பூசகர் எமை நன்கு ஆதரித்து, கற்கண்டுப் பிரசாதமும் கொடுத்தார்.

பேட்டி துவாரகை

கடலின் மத்தியில் இருக்கும் இக் கோயிலை அடைய 3 மைல் படகில் பிரயாணம் செய்தல் வேண்டும். இங்குதான் குசேலர் கண்ணபிரானைச் சந்தித்தார். அரண்மனை போன்ற கோயிலில் இங்கும் கிருஷ்ணர் மேற்கு திசை பார்த்தபடி அருள் பாலிக்கின்றார்.

துவாரகா அரண்மனை கடலினுள் மூழ்கியதாக புராணங்கள் கூறுகின்றன. சமீபத்தில் 1979-80 ஆண்டுகளில் டாக்டர் S.R.Rao என்ற கடல் ஆராய்ச்சியாளர் தன் குழுவுடன் நடத்திய ஆராய்ச்சியின்படி மூழ்கிய நகரம் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்குள் கண்ட சங்குகளும் நாணயங்களும் மகாபாரதத்தில் கூறப்பட்டவை போன்று ஒத்திருந்தன. இதனால் கிருஷ்ணன் என்ற அரசன் உண்மையில் வாழ்ந்ததாக கருதுகின்றனர்.

துவாரகாவை அடைவதற்கு நாங்கள் பம்பாயிலிருந்து முதலில் போர்பந்தரை விமானம் மூலம் அடைந்தோம். பின்னர் கார் மூலம் துவாரகா சென்றோம். போர் பந்தரில் மாந்தருள் மாணிக்க மாகிய, மனிதருள் தெய்வமாகிய மகாத்மா காந்தியின் பிறந்த வீட்டைப் பார்த்தோம். இது பல அடுக்குகளை கொண்ட மாளிகையாகும். காந்தி வீட்டிலேதான் பிறந்தார். அவ்விடத்தை குறித்து வைத்துள்ளனர். இதை விட அவரின் கீர்த்தி மந்திர் பார்க்க வேண்டிய இடம். குசேலர் பிறந்த இடமாகிய போர்பந்தரில் குசேலருக்கென ஒரு கோயில் உளது. அதையும் பார்த்தோம்.

ரயில் மூலம் செல்வதானால் அகமதாபாத் சென்று துவாரகையை அடையலாம். பஸ்சேவையும் நன்றாகவுள்து.

**இறந்தவர்களின் அஸ்தியை எடுத்துப் புண்ணிய தீர்த்தங்களிலே கொண்டு சென்று கரைப்பதற்காக பலகாலம் வீட்டிலே வைத்திருப்பது சரியா?**

ஒருவர் இறந்தபின் அவருடைய ஆன்மா உய்வடையும் பொருட்டு உடலைத் தீயிட்ட நாளிலிருந்து ஒருவருடம் முடியும்வரை, வருடத் திவசம்வரை செய்யவேண்டிய அர்த்தமுள்ள கிரியை நெறிகள் ஆகம புராணங்களிலே கூறப்பட்டுள்ளன. இதை அபரக்கிரியை (அபரம் - பிந்தியது) என்று சொல்வர். இதிலே 'அஸ்தி சஞ்சயனம்' எனும் சாம்பர் நீரிலிடும் கிரியை கால், தொப்பூள், மார்பு, முகம், தலை எனும் ஐந்து பகுதிகளிலிருந்து எலும்பு, சாம்பல் என்பவற்றை எடுத்து, ஒரு பாத்திரத்தில் இட்டுப் பால் விட்டு சமுத்திரத்தில் இடவேண்டும். இக்கிரியையை முதலாம், மூன்றாம், ஏழாம், ஒன்பதாம் நாள்களில் ஒன்றிலே செய்துவிடவேண்டும். ஆசௌசம் நிறைவு பெறும் நாளிலும் செய்யலாம். அதைவிட்டு, அஸ்தியை எடுத்துவைத்து, எங்கள் வசதிக்கேற்ப இந்தியாவிலே புனித கங்கையிற் கரைப்போம் என வைத்திருப்பது தவறான செயல். கிரியைகளை அந்தந்தக் காலத்திலே செய்துவிடவேண்டும். பின் வருட சிரார்த்தம், ஆடி அமாவாசை, சித்திரா பௌர்ணமி, மஹாளய சிரார்த்தம் போன்ற காலங்களில் இந்தியாவிலே புண்ணிய க்ஷேத்திரங்களில் சிரார்த்தம், தர்ப்பணம் செய்வது உத்தம செயலாகும்.

- இராம தேவேந்திரன்

# திருக்குறள் கற்போம்
## ஒழுக்கம் உடைமை — Propriety of Conduct

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

ஒழுக்கம் மேன்மையையே தருதலால் அவ்வொழுக்கம் நன்மை, தீமை இரண்டனையும் செய்யும் உயிரைக் காட்டிலும் போற்றிப் பாதுகாக்கப்படும்.

Propriety of conduct leads to eminence; therefore it should be preserved more carefully than life.

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

ஒழுக்கத்தைப் பேணி வருந்தியும் காக்க. பலவகையால் நன்கு ஆராய்ந்து தேர்ந்தாலும் ஒழுக்கமே உயிர்க்குத் துணையாகின்றது.

Let propriety of conduct be laboriously preserved and guarded; though one may know and practise and excel in many virtues, that will be an eminent aid.

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

ஒழுக்கம் உடைமையே நற்குடிப் பிறப்பாகும். ஒழுக்கத்தின் வழுவுதல் இழிபிறப்பாய் (அஃறிணையாய்) விடும்.

Propriety of conduct is true greatness of birth; improper conduct will sink into a mean birth.

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

பார்ப்பான் மறந்தாலும் வேதத்தை மீண்டும் ஓதிப் பெறாம். ஆனால், அவன் குடிப்பிறப்பு ஒழுக்கம் குறைய, கெட்டுவிடும்.

A Brahmin though he should forget the Veda may recover it by reading; but, if he fails in propriety of conduct, even his high birth will be destroyed.

அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு

பொறாமை உடையவனிடம் செல்வம் இல்லாததுபோல, ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்ச்சி இல்லை.

Even as the envious man will be without wealth, so will the man destitute of propriety of conduct be without greatness.

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து

ஒழுக்கக் கேட்டால் துன்பம் உண்டாதலை அறிந்து அறிவுத்திட்பமுடையவர்கள் ஒழுக்க நெறி யினின்றும் தளரமாட்டார்கள்.

The firm in mind will not slacken in their observance of the proprieties of life, knowing the misery that flows from the transgression of them.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி

ஒழுக்க நெறியால் மக்கள் மேன்மை பெறுவர். ஒழுக்கக் கேட்டினால் பெறுதற்குரியதல்லாத பழியையும் பெறுவர்.

From propriety of conduct men obtain greatness; for impropriety comes insufferable disgrace.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

நல்லொழுக்கம் நன்மைக்குக் காரணமாய் இன்பம் தரும். தீயொழுக்கம் தீமைக்குக் காரணமாய்த் துன்பம் தரும்.

Propriety of conduct is the seed of virtue; impropriety will ever cause sorrow.

ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்

தீமைதரும் சொற்களை மறந்தும் தம் வாயாற் சொல்லுதல் ஒழுக்கமுடையவர்க்கு இயலாது.

Those who study propriety of conduct will not speak evil, even forgetfully

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதவர் பல நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவு இல்லாதவரே

Those who know not how to act agreeably to the world, though they have learnt many things, are still ignorant.

தமிழ் உரை: முனைவர் இரா சாரங்கபாணி English Meaning: Rev Drew & John Lazarus

# கண்ணனும் தாத்தாவும்

## முத்து

லண்டன் பாராளுமன்றத்துக்கு முன்னால் ஈழத் தமிழ் மக்களுக்காக மனிதாபிமானக் குரல் கொடுக்க உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்களைப் பார்த்துவிட்டு, கண்ணனும் தாத்தாவும் வெஸ்ட்மின்ஸ்டர் சுரங்கரயில் நிலையத்தை நோக்கி நடக்கின்றனர்.

கண்ணன்: என்ன தாத்தா? பேசாமலேயே நடந்து வருகின்றீர்கள்?

தாத்தா: என்னத்தைப் பேசுவது? மனதில் பலவிதமான சிந்தனைகள் வருகின்றன.

கண்ணன்: ஒவ்வொன்றாக எனக்குச் சொல்லுங்கோ தாத்தா.

தாத்தா: ஒரு நாளைக்குச் சாப்பிடாமல் இருப்பதே கஷ்டம், இந்த இளைஞர்கள் பல நாள்களாகச் சாப்பிடாமல் இருக்கிறார்களே! அதைப் பார்க்கக் கவலையாக இருக்கிறது. லண்டனில் வசதியாக இருக்கக்கூடியவர்கள் தங்களுடைய இனத்துக்காகச் செய்வது போற்றப்படவேண்டிய ஒரு தியாகம்.

கண்ணன்: ஆமாம் தாத்தா, எனக்கு ஒரு நாளென்ன, ஒரு நேரமே சாப்பிடாமல் இருக்க முடியாது. அது சரி தாத்தா, தியாகம் என்றால் என்ன?

தாத்தா: தியாகம் என்றால், மற்றவர்களின் நன்மைக்காக எங்கள் ஆசைகளை, வசதிகளை விட்டுக்கொடுப்பது. இந்த இளைஞர்களைப் பார். விதம் விதமாக நன்றாகச் சாப்பிட்டுவிட்டு உல்லாசமாகத் திரியும் வயது. அதற்கான வசதிகள் எல்லாம் இங்கே இருக்கின்றன. அதை யெல்லாம் விட்டு இப்படி மற்றவர்கள் நலனுக்காகப் பட்டினி இருக்கிறார்கள். வேறு சிலர் தாங்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை தங்கள் ஆடம்பரத் தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் வசதி இல்லாமற் கஷ்டப்படுபவர்களுக்கு கொடுப்பார்கள். இன்னும் சிலர் தம்முடைய நேரத்தை மற்றவர்களின் நலனுக்காகச் செலவிடுவார்கள். இதுதான் தியாகம் என்பது.

கண்ணன்: இப்படித் தியாகம் செய்வதால் மக்களின் வாழ்க்கையில் கஷ்டங்களைப் போக்கி விடலாம். அவர்களும் நன்றாக வாழலாம். நானும் வளர்ந்து இப்படி நல்ல காரியங்களைச் செய்யவேண்டும்.

தாத்தா: அதுதான் சரி. நாங்கள் எங்களுக்காக மட்டும் வாழாது பிறருக்கும் உதவி செய்யவேண்டும். பல பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்துப்பார். ஏன், ஒவ்வொரு விஞ்ஞானிகூட ஒவ்வொரு கண்டுபிடிப்பையும் கண்டுபிடிக்க தம் வாழ்க்கையில் எத்தனை வருடங்கள் செலவு செய்து எவ்வளவு வசதிகளை இழந்திருப்பார்கள். உலகிலே நடக்கின்ற பல நல்ல விஷயங்களுக்கு பலரின் தியாகங்கள்தான் காரணம்.

கண்ணன்: காந்தியின் உண்ணாவிரதமும் சத்தியாக்கிரகமும் இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தது என்று நான் தமிழ்ப் பள்ளிக்கூடத்திலே படித்திருக்கிறேன். அதுபோல இவர்களின போராட்டமும் ஏதாவது பலன் கொடுக்குமா தாத்தா?

தாத்தா: ஆமாம் கண்ணா, நாங்கள் அப்படித்தான் நம்புகிறோம். எல்லாம் கடவுள் விட்ட வழி.

கண்ணன்: வேறு எதைப்பற்றி யோசித்தீர்கள் தாத்தா?

தாத்தா: 'பிக் பென்' என்னும், ஒருகாலத்தில் உலகுக்கே நேரம் சொன்ன கடிகாரம்,

அழகான பாராளுமன்றக் கட்டடம், ண்டன் நகரை ஊடறுத்துச் செல்லும் தேம்ஸ் நதி என எல்லாமே எனக்கு வியப்பைத் தருகின்றன. எத்தனை பாலங்கள் இந்த நதிக்குக் குறுக்கே கட்டியிருக்கிறார்கள் பார்த்தாயா?

கண்ணன்: ஆமாம் தாத்தா, ஹமர்சிமித், பட்னி, வான்ஸ்வேர்த், பற்றர்சி, செல்சி, வக்சோல், லம்பெத், வெஸ்ட்மின்ஸ்டர், வாட்டர்லூ, பிளாக்பிறையேர்ஸ், சதக், லண்டன் பிறிட்ஜ், டவர் என்று எத்தனை பாலங்கள். லண்டன் ஒரு பழம்பெரும் நகரம். பல இன மக்கள், பலகோடி மக்கள் வாழும் இடம் என்று படித்திருக்கிறேன் தாத்தா.

தாத்தா: லண்டன் உலகின் தலைநகரம் என்று பெயர்பெற்றது. உலகத்தார் எல்லோரும் அறிந்த நகரம். சூரியன் அஸ்தமிக்காத சாம்ராய்ச்சியத்தின் தலைநகர் என்று பல பெருமைகள் கொண்டது. நான் யாழ்ப்பாணத்தில் இருந்தபோதே இந்த நாட்டின் வரலாற்றைப் படித்திருக்கிறேன் என்றால் பாரேன்.

கண்ணன்: அது எப்படி தாத்தா, உலகமெல்லாம் இந்த நகரத்தைப்பற்றி அறிந்திருக்கிறது?

தாத்தா: இந்த ஆங்கிலேயர் உலகத்தின் பல நாடுகளைக் கைப்பற்றி இருநூறு ஆண்டுகளாக ஆண்டிருக்கிறார்கள்.

கண்ணன்: அப்படியா தாத்தா? எந்தெந்த நாடுகளை ஆண்டார்கள்?

தாத்தா: இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற கிழக்கு நாடுகள், ஆபிரிக்க நாடுகள், மேற்கு நாடுகள் எனப் பல நாடுகளை ஆண்டார்கள்.

கண்ணன்: அதனாலேதான் ஆங்கிலம் உலகப் பொதுமொழி ஆகிவிட்டதோ!

தாத்தா: ஆமாம். தாம் ஆண்ட நாடுகளில் பாடசாலைகளைக் கட்டி மக்களுக்கு ஆங்கிலம் கற்பித்தனர். பல கிறஸ்துவ ஆலயங்களைக் கட்டி மதத்தையும் பரப்பினர்.

கண்ணன்: மிகவும் ஆச்சரியமான கதையாக இருக்கிறதே!

தாத்தா: இது கதையல்ல கண்ணா, வரலாறு. இதைப்பற்றி நீ புத்தகங்களில் படித்து அறியலாம்.

(கண்ணனும் தாத்தாவும் மின்வண்டி நிலையத்துக்கு வந்து சேர, வண்டியும் வருகிறது. இருவரும் அதில் ஏறி அமர்கிறார்கள்)

கண்ணன்: ஏன் தாத்தா சிரிக்கிறீர்கள்?

தாத்தா: சிரிக்காமல் என்ன செய்கிறது? முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்று ஒரு பழமொழி கேட்டிருக்கிறாயா?

கண்ணன்: ஓ! படித்திருக்கிறேனே! என்னுடைய தமிழ்ப் புத்தகத்தில் இருக்கிறது.

தாத்தா: அதன் அர்த்தம் தெரியுமா?

கண்ணன்: கொஞ்சம் தெரியும் தாத்தா, ஆனால் நீங்கள் சொல்லுவதுபோல இருக்காது. நீங்களே சொல்லுங்கோ.

தாத்தா: நாங்கள் என்ன செய்தாலும் அது நல்லதோ, கெட்டதோ அதன் பலன் நமக்கே திரும்பி வரும். நல்லது செய்தால் நமக்கு நல்லது வரும். கெட்டது செய்தால் நமக்கு கெட்டதே வரும்.

கண்ணன்: அப்போ, நாங்கள் எதைச் செய்தாலும் நன்றாக சிந்தித்து நல்லதைத்தான் செய்யவேண்டும். தீமை செய்தால் அது எங்களுக்கு துன்பத்தைத்தான் கொடுக்கும் என்கிறீர்கள்.

தாத்தா: ஆமாம் கண்ணா, மற்றவர்களுக்கு நல்லதைச் செய்யவேண்டும் என்று நினைத்துத்தான் ஔவையார் 'அறம் செய விரும்பு' என்று சொல்கிறார். நாங்கள் பிறருக்கு எப்போதும் நன்மை செய்தால் நமக்கு கடவுள் நல்லது செய்வார்.

கண்ணன்: அப்போ ஏன் தாத்தா சில நல்லவர்கள் எப்போதும் கஷ்டமும் துன்பமும் அடைகிறார்கள்?

தாத்தா: அவர்கள் இந்தப் பிறவியில் நல்லவர்களாக இருந்தபோதும் முற்பிறவியில் ஏதாவது தவறு செய்திருக்கக்கூடும். அதுமட்டுமல்ல கண்ணா, ஒருவருக்குத் துன்பம் வரும்போதுதான் அவர் தனக்கு ஏன் இப்படித் துன்பம் வருகிறது என்று அவரைச் சிந்திக்க வைக்கிறது. அதனால் அவர் வாழ்வில் பல உண்மைகளை உணர்கிறார். அது அவரின் உள்ளத்தை மிகவும் பண்படுத்தும். நீ பெரியவனானபின் உனக்கு இது எல்லாம் புரியும்.

கண்ணன்: இதுக்கு ஏதாவது பாட்டு உள்ளதா? இருந்தால் சொல்லுங்கோ, நான் பாடமாக்கி விடுவேன்.

தாத்தா: சரி, கேள்.

**"நல்ல குரு ஈதர் நம்மை வருத்துவது கொல்லவல்ல, கொல்லவல்ல, பொல்லா வினையறுக்க"**

கண்ணன்: (பாட்டை இரண்டு தரம் சொல்லிப் பார்க்கிறான்) ம்.. ம்.. இது இலகுவாகச் சொல்லக்கூடிய பாட்டுத்தான்.

தாத்தா: நாங்கள் இறங்கவேண்டிய இடம் வந்துவிட்டது கண்ணா.

கண்ணன்: சுவாரஸ்யமான விடயங்கள் பேசிக்கொண்டு இருந்ததில் நான் இறங்குவதையே மறந்துவிட்டேன்.

தாத்தா: எதைச் செய்தாலும் காரியத்தில் கண்ணாக இருக்கவேண்டும். அதற்கு ஒரு பழைய சினிமாப் பாடல் சொல்கிறேன் கேள்!

**ஆரியக்கூத்தாடினாலும் தாண்டவக்கோனே - உன்**
**காரியத்தில் கண்வையடா தாண்டவக்கோனே**

கண்ணன்: எப்படித்தாத்தா தேவாரம், திருக்குறள், திருப்புகழ், சினிமாப் பாட்டு எல்லாமே தெரிந்து வைத்திருக்கிறீர்கள்.

தாத்தா: நான் உன்னைப்போலச் சிறுவனாக இருந்தபோது பள்ளியில் தேவாரம், திருக்குறள், திருப்புகழ் எல்லாம் படித்தேன். மற்றவை நானாகப் படித்தவை, மற்றவர்கள் சொல்லக் கேட்டது, பார்த்தது என்று தெரிந்துகொண்டதுதான். இப்போது நீங்கள் பயன்படுத்தும் கணினியை விட எங்கள் மூளையில் எவ்வளவோ விஷயங்கள் பதிவு செய்யலாம். அது எங்கள் வாழ்க்கைக்கு எப்போதும் பயன்படும்.


கண்ணன்: அப்போ என்னைப்போன்ற சிறுவர்கள் காலத்தை வீணாக்காது ஒவ்வொரு நாளையும் எங்கள் அறிவை வளர்க்கப் பயன்படுத்தவேண்டும். என்ன தாத்தா?

தாத்தா: ஆமடா கண்ணா! சிறுவனாகிய நீ உலகத்திலே படிக்கவேண்டிய விஷயங்கள் நிறையவே உள்ளன. வண்டியின் கதவு திறக்கிறது, வா இறங்குவோம். தாத்தாவின் கையைப் பிடித்துக்கொண்டு கண்ணன் இறங்குகிறான். இருவரும் வீடு நோக்கி நடக்கிறார்கள்.

# Hinduism in search of answers...
# IDOLS

## (Continued from last issue)

### What are Murugan's special features?



Lord Murugan, also called Lord Subramanya, holds a spear in his hand. He rides a peacock, which grips a snake with its feet.

Lord Murugan, like other gods, is a picture of human perfection. Through symbolism he indicates the ways and means to reach perfection.

Most of the Hindu gods wield weapons of destruction. Lord Murugan holds a spear, which is meant to destroy Vasanas (desires and their roots) within oneself.Only through the destruction of the desires man can attain God. In fact, man minus desires is God. Holding a spear, Lord Murugan proclaims the destruction of all his vasanas.

The significant characteristic of the peacock is its vanity, exhibited through its dancing with its feathers spread out like a fan. The peacock as the vehicle of Lord Muruga, symbolises the vanity of man that needs to be conquered and kept under control.

The snake represents the ego, which is kept under control by the peacock. Ego creates a poisonous mind, which leads to desires and destroys peace. When the ego is held firm and the desires are kept under control, man gains mastery over the mind and reaches perfection.

Another form of Murugan is Shanmuga. This form has 6 faces. It means that the supreme self expresses itself in human beings through the five senses and the mind.

# What does Siva Linga symbolise?




Linga worship has an ancient past, which goes beyond the geo-political boundaries of any single nation. Traces of linga worship have been found Mayan, Egyptian, and Mesopotamian and Indus Valley civilisations. In 1925 O.A Wall drew reference: 'In the Zhob valley, where a small farming groups existed before 3000 BC, a carved stone linga was found

According to Swami Vivekananda the Linga worship originated from famous hymn in Atharva Veda Samhita, sung in praise of the Yupa-stambha the sacrificial post. Explaining the hymn he said, 'A description is found of the beginingless end endless stambha , and it is shown that the said stambha is put in place of the eternal Brahman. Later the yajna fire, its smoke ashes and flames, the soma plant and the ox that used to carry on its back the wood for the vedic sacrifice, gave place to the conception of the brighteness of Siva's body, his tawny matted hair, his blue throat.. the bull of Siva and so on- just so, the yupa=sambha gave place in time to the Siva linga and was defined as the high devahood of Shankara'.

God is beyond the reach of the finite equipments of man. Siva Linga is an indirect way of

communicating the nature of God. Linga in sanskrit means symbol. Symbolism is an art of representing thoughts, ideas, objectives and ideals through the medium of signs and symbols. Hindu symbolism explains the Truth of religion and philosophy through idols, signs and stories. All Hindu symbols have spiritual significance relating to life.

In Siva Linga, the ellipsoid (the elongated middle part) corresponds to two aspects ofGod; Siva (unmanifest) and Sakthi (manifest). The bottom half of the stone that is hidden represents Siva (unmanifest). It supports the upper half. The top half represents Sakthi (manifest) – the seen, visible world.



What is the Meaning of Namaskaram?

The symbolic obeisance in Hindu way of life is 'Namskaram, or Pranam, or Namskar. These are spiritual postures meant to salute God and spiritually enlightened men.

Ashtanga/Sashtanga – in which the devout prostrates him with eight parts his body touching the ground. (Knees, belly, chest, chin, nose, temple, hands, and elbows) This is the namskaram offered to divine power.


Panchanga – posture where five parts of body are lowered (forehead, temple, chest, chin and knees)


handam Samarpanam, meaning submitting the stick (Prayer by submitting by lying on floor)


If you throw away a stick it would fall flat without any support. In the same way we must throw away the egoistic 'I' and submit ourselves humbly to the Lord.


to be continued.........



ஸ்ரீதரன் அம்பிகைபாகன்
வயது - 10 வயது


சைலேஸ்
கனேசானந்தன்
வயது - 8
சங்கீத வித்துவான்கள்
முத்து
சுவாமிதிக்சிகர்
தியாகராஜ
சுவாமிகள்
ஸ்ரீ சியாமா
சாத்திரிகள்


Thiruvalluvar - continued
21 B.C, Uggiraperuvazhuthi decided to send a delegation of Merchants to Augustus Caesar and strengthen the trade link. Incidentally, his envoy gave a letter requesting permission for immigration of Roman merchants at Madurai.
Hail Augustus Caesar! Hail Uggiraperuvazhuthi!
His Majesty has honoured me too much.
Envoy, permission granted. I am also sending a delegation of merchants to Rome with Elelasingan as leader.
Elelasingan left for Rome taking leave from Mullai.
Dear, I'll miss you very much.
I will be back Before long.
Uggiraperuvazhuthi understood from spies that the Chola King Karikalan was planning to invade Pandianadu and convened the council. He wanted to launch a surprise attack before the Chola King did. Alavayar instigated it.
To Karikalan, Chera king Selvakadungo is ally. To you?
Krishna, to Pandavas. Valluvar to Pandian,
Then how to forestall the invasion?
To change the enemy as friend!
This council hominates you as the ambassador to the court of Karikalan.
Also award you the title of "Perunavala" (Great Orator) for your rhetoric.


At Kavirippoompattinam, Valluvar explained to Karikalan the characteristics of the Good State, Golden State envisaged by him.
It will be free from hunger, disease and enmity.
What is the assurance that if I don't invade Pandianadu, Pandian will not invade my country?
Valluvar has shown your poem in Madurai Tamil Academy as assurance which says that Vazhuthi will not swerve from his word even if the whole world changes its course. Hence, Uncle, I'll not invade Pandianadu.
Valluvar, Chola Country awards you the title of "Sennapodhaar" (Judicious tongued)
All are my places and countries
The Chera king Selvakadungo also sent a communication seeking alliance, Successfully completing his trade mission, Elelasingan returned from Rome to Madurai. The king rendered two poems due to his real love life now with Kopperundhevi. The Vedic saint Nalgur Velviyar came to him.
Oh king, Your predecessor Peruvazhuthi perform thousand sacrifices and came round this land with the title "Palyagasalai Mudhukudumi". So you should also perform thousand sacrifices.
Better not to kill one creature and eat it than to perform thousand sacrifices.


We should perform sacrifices for the God. In turn, they will give us heaven.
Even if one does not get heave.., it is good to give only. Benevolence seeks nothing in return. What does the world give back to rain? One, living on earth as he should live, will be placed among the Gods dwelling in heaven,
You are a real ascetic in domestic life itself without tonsure like a Buddhistic saint or tangled hair like me.
Tonsure and tangled hair are outwardl
To eschew those condemned by enlightened is holy.
Buddha to Bimbisara! Valluvar to me. Can't perform sacrifices.
Valluvar, kindly pay a visit to this poorman's dwelling tonight and dispel my doubts. I can come by to pick you up later.
Friend, it's my duty. I can find my way.
Valluvar the Great, Warm welcome to you,
Thanks, Suppose I have not come late, Aiavayar!




Courtsey: International Tamil Language Foundation

to be continued......

# RISHI KESH SHIPPING SERVICE LIMITED

customs clearance Air freight
LCL Console Shipping

கோயில்களுக்குத் தேவையான
எல்லாப்பொருள்களும் இறக்குமதி செய்து தரப்படும்







**IMPEX HOUSE**
**14 Cavendish Road**
**West Croydon**
**Surrey CR0 3LB**
**UNITED KINGDOM**

Email: rishikeshshipping@yahoo.co.uk
naresnd_1967@hotmail.com




NARAINDRANATHAN.N
Manager
0ffice Tel: 0044 208 680 5855
Telefax: 0044 208 684 3828
Mobile: 0044 7723367117



# WESTERN
## JEWELLERS

*Jewellers & Gem Merchants*

230,UPPER TOOTING ROAD
LONDON SW17 7EW
**PHONE : 020 8767 3445**

# SILK EMPORIUM

122 UPPER TOOTING ROAD LONDON SW17 7EN
**PHONE : 020 8672 1900**

# WESTERN
## JEWELLERS & TEXTILES



5, PLAZA PARADE, 29-33, EALING ROAD,
WEMBLEY, MIDDLESEX HA0 4YA.
**PHONE : 020 8903 0909**

**OPENNING HOURS**
**Monday to Saturday**
**10.00am - 6.30pm**
**Sunday 11.00am - 5.30pm**


இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (தொலைபேசி : 020 8646 2885) வடிவமைத்து, அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 07 - 08 - 2009 அன்று வெளியிடப்படுகிறது.